GOKULAM


கோகுலம்

டிசம்பர் '98 ரூ. 6/-



உலகம் போற்றும் உன்னதக் கலை!

பிருந்தாவனம்



இரண்டு படங்களுக்கும்
இடையில் உள்ள ஐந்து
வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!


விடை
1. பாம்பின் நாக்கு, 2. இலைகள், 3. யானையின் நாக்கு,
4. வலப் பக்கம் உள்ள காது, 5. இடக்காது



என் தோகை
அழகா இருக்கா?
பார்த்துச் சொல்லுங்க!

ராஜு ஊதும்
சோப்பு முட்டை
களின்
எண்ணிக்கை
என்ன?

விடை - 21



''பசுவோட படம் வரைஞ்சியே,
அதுக்கு ஏன் வாய் போடலே?''
''அது வாய் இல்லாத ஜீவனாச்சே!''
— ஆர். வரதராஜன்,
மல்ல சமுத்திரம்



டிசம்பர் 1998 ◆ மலர் : 16 ◆ இதழ் : 11



கோகுலம்

அன்பார்ந்த சிறுவர் சிறுமியரே,

கேபிள் டீவி போன்ற சாதனங்களின் காரணமாக மேல்நாட்டுக் கலாசாரப் படையெடுப்பு இங்கே நிகழ்கிறது. அதிலும் உயர்தரமான மேல்நாட்டு மரபு வழி நடனம், இசை வருவதில்லை. காட்டுக் கத்தலான பாடல்களும் அபத்தமான அசைவுகளுடன் கூடிய நடனங்களும்தான் முக்கியத்துவம் பெறுகின்றன. இவையெல்லாம் நமது தொன்மையான கலாசாரத்தைப் பின்னுக்குத் தள்ளி விட நாம் அனுமதிக்க முடியாது.

நமது கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசை, பரத நாட்டியம், இன்னும் கதக், மணிப்புரி, பங்ரா போன்ற நடனங்களுக்கு இணையாக உலகில் வேறு எங்குமே கிடையாது. இலக்கிய ரீதியாகவும் சரி, இலக்கணரீதியாகவும் சரி, மனதை இசைவிக்கும் இனிமை என்று பார்த்தாலும் சரி, மரபு வழி வந்த நமது கர்நாடக சங்கீதம் உலக அரங்கிலே முதலிடம் பெறுகிறது. இதை மேல்நாட்டு இசை வல்லுனர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

நமது இசை வல்லுனர்கள் (வாக்கேயக்காரர்கள்), இசையையும் தந்தார்கள்; அதனுடன் சேர்த்துப் பாடல்களையும் புனைந்தார்கள்; அதில் பக்தி ரசத்தைப் பிரதான மாக்கினார்கள். இத்தனை வகையான ராக, தாள அமைப்புகளும், கட்டுப்பாடான அந்த அமைப்புக்குள்ளே நடக்கிற சுதந்திரக் கற்பனைப் பின்னல்களும் உலகில் வேறு எந்த இசையிலும் இல்லை!



இத்தகைய அற்புதமான இசையோடு நாடக உத்தியும் சேர்ந்தபோது பரதநாட்டியம் – அபிநயம் என்ற உன்னதக் கலை பிறந்தது.

எல்லோராலும் கர்நாடக இசையைப் பாட முடியாது; எல்லோராலும் பரதநாட்டியம் ஆட முடியாது. ஆனால் அனைவராலும் இவற்றை ரசிக்க முடியும். ஆரம்பத்தில் கொஞ்சம் ஈடுபாட்டை நாமே வளர்த்துக் கொண்டால் அப்புறம் அந்தக் கலைகள் நம்மை வளர்க்கும்! நமது உள்ளங்களை வளப்படுத்தும்.

உயர் ரசனை என்பது இளம் உள்ளங்களிலேயே தூவப்பட வேண்டிய ஒன்று. இன்று பள்ளிக் கூடங்களில் இந்த வாய்ப்பு இல்லை. எனவே பெற்றோருக்குத்தான் பொறுப்பு அதிகமாகிறது. அவர்கள் முதலில் தங்கள் ரசனைத் திறனை வளர்த்துக் கொண்டு குழந்தைகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ வேண்டும். உயர்தரமான ஒரு கலை நிகழ்ச்சிக்குக் குழந்தைகளை மாதம் ஒரு தடவையாவது அழைத்துப் போக வேண்டும். பின்னர் அது பற்றி விவரமாக அவர்களிடம் பேச வேண்டும்.

இதை இந்த டிசம்பர் மாதம் கலை விழா நிகழ்ச்சிகளின் போது ஆரம்பித்து வைக்கலாமே?


அன்புடன்,

ஆ. ராஜேந்திரன்,
ஆசிரியர்.

> உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
> உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.










கோகுலம்

டிசம்பர் 1998

இந்த இதழில்....


வழக்கம்போல அக்காவுக்கும் தம்பிக்கும் சண்டை
சண்டைக்கு மருந்து!
என் பேனாவை இனிமே நீ எடுத்தா அடிப்பேன்.
நீ அடிச்சா, நான் உதைப்பேன்..
சண்டை ஆரம்பிச்சாச்சா!
ராணி, நீயாவது விட்டுக் கொடுக்கக் கூடாதா?
ஏன், அவன் விட்டுக் கொடுக்கக் கூடாதா?
சரி விடாம சண்டை போடுங்க! ... நிம்மதியே இல்லே!
பள்ளியில் ராணியும், ரீஷ்மாவும்—
கதை: வடுவூர் நாராயணன்
படம்: ஜீஜு....
என்ன ராணி சோகமா இருக்கே?
எனக்கும் தம்பிக்கும் அடிக்கடி சண்டை வருது...
..அம்மா அப்பாவுக்கும் நிம்மதி யில்லை.
நீ பொறுமையா இருந்துட வேண்டியது தானே?
என்னால முடியலை ரீஷ்மா.


சரி. சாயங்காலம் என்னோட வீட்டுக்கு வா!
எதுக்கு?
சாயங்காலம் சொல்றேனே!
ரீமா வீட்டில்–
இந்தா.
தண்ணியா?
இல்லை.. மருந்து. சண்டை வரும் போது இதில் கொஞ்சம் வாயில் ஊத்தித் துப்பவும் கூடாது, விழுங்கவும் கூடாது. சண்டை நின்னாப்புறம், துப்பிடு!
அன்று வீட்டில்–
ராணி, உனக்குத் திமிர் அதிகம்... என் ஸ்கேலை இனிமே நீ தொடக்கூடாது..
ராணி கொஞ்சம் மருந்தை வாயில் ஊற்றிக் கொண்டு
?
என்ன இவள் இன்று சண்டைக்கே வரமாட்டேங்கறா?!


அதன் பின் ஒரு நாள்—
ரீன்மா, உனக்கு ரொம்ப ரொம்பத் தாங்க்ஸ்
இப்பவெல்லாம் எனக்கும் தம்பிக்கும் சண்டை வருவது நல்லா குறைஞ்சுபோச்சு!...ம்.. மருந்தும் காலியாப் போச்சு!
அடி பைத்தியமே.. அதுக்குக் காரணம் உன் பொறுமை ... அல்லது உன் மௌனம். மருந்து இல்லை! அது வெறும் தண்ணி!
உனக்கு எப்படி இந்த ஐடியா வந்தது?
என் தங்கையிடம் சண்டை வராமலிருக்க என் பாட்டி தந்த ஐடியா தான்!


குற்றவாளி யார்?

வள்ளியூரில் வாணி, ரங்கம் என்ற இரண்டு பெண்கள் காய் வியாபாரம் செய்து வந்தனர்.

வாணி கூடை கூடையாக காய்களை வாங்கித் தள்ளு வண்டியில் வைத்து வீதி வீதியாகச் சென்று விற்பனை செய்வாள். அதிக லாபம் வைத்து விற்பாள். ஆனால் விற்று வரும் லாபத்தை செலவிட்டு விடுவாள். கை கொஞ்சம் தாராளம்.

ரங்கமோ கூடையைத் தலையில் சுமந்து வீடு வீடாகச் சென்று வீட்டிலுள்ளோரிடம் அன்பாகப் பேசி சொற்ப விலைக்கு காய்கனை விற்று வ்ந்தாள். அன்றைய லாபத்தினை தேவைக்கு ஏற்ப செலவழித்து விட்டு மீதியை ஒரு தகர டப்பாவில் போட்டு வீட்டின் முன்னுள்ள மரப் பொந்தில் ஒளித்து வைப்பாள்.

ரங்கம் தினம் தினம் சேர்த்த காசுகளை அன்று எண்ணிக் கொண்டிருந்தாள். ஐந்து ரூபாய், இரண்டு ரூபாய், ஒரு ரூபாய், 50 காசு, 25 காசு, பத்து காசு என சில்லறைகளாக இருந்தது. இருநூறு ரூபாய் ஐந்து காசு சேர்ந்திருந்தன. இவள் எண்ணி விட்டு மறுபடியும் மரப் பொந்தினுள் வைத்ததை வாணி தன் வீட்டில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.



நாளை விடிந்தால் சரஸ்வதி பூஜை. காலை இந்த ரூபாயில் ஒரு பத்து ரூபாய் எடுத்து மாலை வாங்கி சரஸ்வதி படத்துக்குப் போட வேண்டும் என்று நினைத்தாள் ரங்கம்.

காலை தகர டப்பாவை திறந்து பார்த்த ரங்கம் திடுக்கிட்டாள். ஒரு ஐந்து பைசா நாணயம் மட்டும் அவளைப் பார்த்து சிரித்தது. மரப் பொந்தில் வைத்தபோது தன் வீட்டு வாசலில் வாணி நின்றது நினைவுக்கு வந்தது. அப்போது வாணி அந்தப் பக்கம் வந்தாள்.

"என்னக்கா எதையோ பறிகொடுத்த மாதிரி இருக்கே" என்று கேட்டு கேலிச் சிரிப்புடன் அவளைக் கடந்து போனாள்.

ஜானகி குமார்

"ஏய் வாணி! நான் மரப் பொந்தில் வச்சிருந்த ரூபாயை பார்த்தியா? காணோம்" என்றாள் ரங்கம்.

"உன்னுடைய பிச்ச காசு யாருக்கு வேணும்? நான் வண்டி நிறைய காய் வச்சு விக்கிறேன். உன்னைப் போல கூடையில் காய் சுமக்கலை" என்றாள் வாணி.

"இன்னிக்கு கூட நூற்றி எழுபத்தி அஞ்சு ரூபாய்க்கு காய் வாங்கினேன். இன்னும் இரு பத்தஞ்சு ரூபா எங்கிட்ட இருக்கு ஆமாம்" என்றவாறு போனாள் வாணி.

ரங்கத்துக்குப் புரிந்து விட்டது. நேராக அவ்வூர் பெரியவரைத் தேடிப் போய் நடந்ததைச் சொல்லி அழுதாள். ஆறுமாத சேமிப்பு போன துக்கம் அவளுக்கு.

பெரியவர் வாணியை வரச் சொல்லி ஆள் அனுப்பினார். வாணி வந்து "என்னை பத்தி இந்த ரங்கம் தப்பா சொல்லுது. வண்டி வச்சு விக்கிற எங்கிட்ட எத்தனை பணம் புரளுது. இவளோட பிச்ச காசு எனக் கெதுக்கு?" என்றாள்.

"சரி, சரி! உங்க சுருக்குப் பையில் எத்தனை பணமிருக்கு? இரண்டு பேரும் எண்ணி சொல்லுங்க; பிறகு நியாயம் பேசலாம்" என்றார் பெரியவர். இருவருமே பையிலுள்ள காசை பெரியவர் இருந்த மேடையில் கொட்டி எண்ண ஆரம்பித்தார்கள்.

பெரியவர், "வாணி, மரியாதையா ரங்கத்திடம் திருடின காசை கொடு. இல்லை போலீஸில் சொல்ல வேண்டி வரும்" என்றார்.

"என்னய்யா அவளும்தான் காசை கொட்டி எண்ணுறாள், என்னை திருடிங்கறீங்க" என்று சத்தம் போட்டாள்.

"வாணி நீ எண்ணுகிற காசை கையில் எடுத்துப் பாரு புரியும்" என்றார் பெரியவர்.

எடுத்துப் பார்த்த வாணி, "ஐந்து ரூபா துட்டு இரண்டு, இரண்டு ரூபா துட்டு, இது அவகிட்டயும் இருக்கே! எம்மேல வீண் பழி சுமத்தறீங்க" என்றாள்.

"ஆறு மாதமா ரங்கம் சேர்த்து வச்ச காசு டப்பாவில் கிடந்து துரு பிடித்துப் போயிருக்கு. அது உன்கிட்ட இருக்கு. மழுங்கின புதிய காசுகள் அவகிட்ட இருக்கு. இதைவிட வேற என்ன ஆதாரம் வேணும்?" என்று கேட்டார் பெரியவர்.

வாணி தன் தவறை ஒப்புக் கொண்டாள்.

பறக்கும் பட்டாம் பூச்சி!


தேவையானவை :

1. அஞ்சல் அட்டை அல்லது அதே அளவு தடிமனான தாள்
2. கத்தரி
3. பென்சில், ஸ்கெட்ச்

எப்படி செய்வது?

முதலில் அஞ்சலட்டை அல்லது வேறு தடிமனான தாளை எடுத்துக் கொள்ளுங்கள். அந்தத் தாளை சதுரமாக வெட்டிக் கொள்ளுங்கள்.

1. படத்தில் காட்டியபடி தாளை வைத்து பாதியாக மடிக்கவும்.





2. அந்த சதுரத்தாளில் வண்ணத்துப் பூச்சியை வரைந்து வண்ணம் தீட்டுங்கள்.

3. சதுரத் தாளை சற்று மடங்கியபடி மேஜை மீது வைக்கவும். இப்போது வல, இட முனைகள் இரண்டு மட்டும் மேஜையைத் தொட்டுக் கொண்டிருக்கும்.

தாளுக்கு அருகில் சென்று ஊதினால் வண்ணத்துப் பூச்சி 'படபட' என்ற சத்தத்துடன் நகரும்.



செய்து பாருங்கள்!

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெறும் முதல் கதை

மாறியது உள்ளம்!

ஆ. வித்யா

கோடை விடுமுறை முடிந்து அன்று பள்ளி தொடங்கியது. அது ஒரு பெண்கள் மேல்நிலைப் பள்ளி. மாணவிகள் புத்தம் புது சீருடை, புத்தகப்பை சகிதமாக பள்ளிக்கு வந்த வண்ணமிருந்தனர். சிலருடைய முகங்களில் குதூகலமும், சில மாணவிகளுடைய முகங்களில் விடுமுறை இன்னும் பத்து நாள் அதிகமாக இருக்கக் கூடாதா என்ற ஏக்கமும் இருந்தது.


பெருத்த ஓசையுடன் நின்ற டி.வி.எஸ் வண்டியிலிருந்து தன் தந்தையுடன் பள்ளிக்கு வந்திறங்கினாள் திவ்யா. இன்று எட்டாம் வகுப்பிற்கு அடியெடுத்து வைக்கிறாள். எல்லோரிடமும் கலகலப்பாகப் பழகும் சுபாவம். இரக்க குணம். திவ்யாவின் தந்தைக்கு ஒரு பெரிய வங்கியில் காசாளர் வேலை. தாய் துவக்கப்பள்ளி ஆசிரியை. திவ்யா இவர்களின் ஒரே செல்லப்பெண்.

"ஹாய்... திவ்யா" தூரத்தில் இருந்து உரக்கக் கத்திக் கொண்டு உற்சாகத்துடன் ஓடி வரும் தன் தோழி ராதிகாவைப் பார்த்து சந்தோஷத்துடன் கையசைத்தாள் திவ்யா. ஓடிவந்து கைகளை பற்றிக் கொண்டாள் ராதிகா. விடுமுறையைப் பற்றியும் தாங்கள் சென்றுவந்த ஊர்களைப் பற்றியும் மெய் மறந்து பேசிக் கொண்டே தங்கள் வகுப்பு வாசலை நெருங்கவும் பள்ளி மணி ஒலிக்கவும் சரியாக இருந்தது.

வகுப்பறையில் மாணவிகள் சளசளவென பேசிக் கொண்டிருந்தனர். சிலர் வகுப்பில் புதிதாகச் சேர்ந்திருந்தார்கள். பழைய மாணவிகளில் சிலர் அவர்களை விசாரிப்பதும், அவர்களில் தங்களுக்குப் பிடித்தவரை தோழியாக்கிக் கொள்ள விழைவதிலும் முயன்று கொண்டிருந்தபோது தமிழாசிரியை உள்ளே நுழைந்தார்.

அனைவரும் எழுந்து வணக்கம் தெரிவித்து அமர்ந்தவுடன், ஆசிரியை வருகைப் பதிவேடு எடுத்துவிட்டு முதன் முதலில் வாழ்த்துப்பா நடத்தத் தொடங்கினார். அதில் லயித்து அனைவரும் கவனித்துக் கொண்டிருக்கும் வேளையில்,

"மேடம் நியூ அட்மிஷன்" என்ற பள்ளி பியூனின் குரல் கேட்டு வகுப்பு மொத்தமும் வாசல் பக்கம் திரும்பியது. 'உள்ளே வந்த அந்தப் புதுமாணவி நடக்கத் தொடங்கியபோது பார்ப்பதற்கே



மிகவும் பரிதாபமாக இருந்தது. அவளுடைய வலதுகால் போலியோவினால் பாதிக்கப்பட்டு வளைந்து இருந்தது. அவள் விந்தி விந்தி நடந்து வந்து திவ்யாவிற்கு அருகில் காலியாக இருந்த இடத்தில் அமர்ந்தாள். தமிழாசிரியை உட்பட அனைவரும் சற்றுநேரம் அவளையே பார்த்தனர்.

"உன் பேர் என்னம்மா? எந்தப் பள்ளியில் படிச்சே?" என்று கனிவாகக் கேட்டார் ஆசிரியை. "என் பெயர் சுதா. நான் முத்துப்பேட்டை ஸ்ரீ பெரிய நாயகி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் படித்தேன் டீச்சர்" என்று பதிலளித்தாள் சுதா.

ஒருவாரம் சென்றிருக்கும். திவ்யாவிற்கு மிக ஆச்சர்யமாக இருந்தது. வகுப்பில் ஒரு சிலரே சுதாவுடன் பழகினார்கள். திவ்யாவின் தோழி ராதிகா உட்பட. வந்த முதல் நாள் திவ்யாவின் பக்கத்தில் சுதா அமர்ந்தது முதல் மெல்ல மெல்ல இருவரும் நெருங்கிய தோழிகளானார்கள். பரஸ்பர விசாரிப்புகளுடன் தொடங்கிய நட்பு பன்மடங்கு வளர்ந்தது.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. திவ்யாவின் அம்மா அவளை காய்கறி வாங்க மார்க்கெட்டுக்கு அனுப்பினார். மும்முரமாய் பார்த்து பார்த்து காய்களை வாங்கிக் கொண்டிருந்த திவ்யாவின் தோளில் ஒரு கரம் விழுந்தது. திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தபொழுது வகுப்புத் தோழி பூமா சிரித்தாள்.

பூமா எப்போதுமே வகுப்பில் முதலாவதாக வருபவள். மிகுந்த சுயநலம் உடையவள். தான்தான் முதல் என்பதில் அதிக கர்வம் உடையவள். சக மாணவிகள் பாடத்தில் எந்த சந்தேகம் கேட்டாலும் உதவ மாட்டாள். அப்படிப்பட்டவள் தன்னிடம் வலியவந்து சிநேகத்துடன் சிரிப்பதைக் கண்ட திவ்யா ஆச்சரியப்பட்டாள்.

"ஹேய், திவ்யா என்ன திகைச்சிப் போயி நிக்கறே?" சிரித்தபடி கேட்டாள் பூமா.

"உம்...ஒண்ணுமில்ல..." சமாளித்தாள் திவ்யா.

"என்ன மேடத்துக்கு பெரிய மதர் தெரஸான்னு நெனைப்போ" கிண்டலாகக் கேட்டாள் பூமா.

"என்ன சொல்ற பூமா?" புரியாமல் கேட்டாள் திவ்யா.

"ஆமா, ஆமா இப்ப உனக்கு தலை கால் புரியாதுதான். புது தோழி கிடைச்சிட்டாளே! எங்களையெல்லாம் கண்ணுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள் பூமா.

"ஓஹோ சுதாவச் சொல்றியா? நீங்க யாருமே சுதாவோட சரியா பழகுறதில்ல. எல்லாருமா சேர்ந்து அவளை ஒதுக்குனா அவ மனசு என்ன பாடு படும். அவளும் நம்ம கிளாஸ்மேட் தானே பூமா!"

"அடி போடீ, பெரிய கிழவி மாதிரி பேசறே. மனசுல பெரிய இவன்னு நெனப்பு. நீ எப்படிதான் அவளோட பழகுறியோ? ஸ்கூல் விட்டவுடனே அவ் வேகத்துக்கு நீ நடக்குறதும், சின்ன சின்ன உதவி பண்றதும், ரொம்ப அலட்டிக்கிற திவ்யா. எல்லாரும் அவள ரோட்ல பரிதாபமா பாக்குறாங்க. அந்



தப் பார்வை உன் மேலயும் படுதுல்ல, உனக்கு வெட்கமாயில்ல. என்னைப் பாரு, நா நல்ல ரிச்சா, அழகா, டீஸண்ட்டா இருக்குற பெண்களோட தான் சேருவேன்" என்று அவள் பேச மௌனமாகக் கேட்டுக் கொண்டே வந்தாள் திவ்யா.

மீண்டும் தொடர்ந்தாள் பூமா: "இங்க பாரு திவ்யா. கால் முடியாதவளுக்கு உதவுறேன் அப்படி இப்படின்னு உன்னை நீயே குழப்பிக்காதே! நாளை யிலேருந்து அவளோட பழகுறதை விட்டுட்டு எங்ககூட சேரு." பேசிக் கொண்டே நடக்க ஆரம்பித்தார்கள்.

"பூமா நீ சொல்றமாதிரி வெறும் இரக்க உணர்ச்சியோட மட்டும் நான் சுதாவோட பழகல. உண்மையிலேயே அவ நல்லவ..."


முடிப்பதற்குள் இடைமறித்தாள் பூமா. "திவ்யா, அவ என்ன பாவம் செஞ் சாளோ, அதான் இப்படி அனு பவிக்கிறா, நீ ஏன்..."

முடிப்பதற்குள் திடுமென அது நிகழ்ந்தது. இரண்டு சாலைகள் சந்திக்கும் இடத்தை அவர்கள் பேசிக் கொண்டே கடக்கும்பொழுது பின்புறத் திலிருந்து படுவேகத்துடன் வந்த லாரி ஒன்று பூமா மீது ராட்சஷ வேகத்துடன் மோத வரும் வேளை, சட்டென்று சமயோசிதமாக அவளைப் பிடித்து தூக்கி வீசினார் பின்னால் வந்த பெரி யவர் ஒருவர். லேசான தடுமாற் றத்துடன் விழுந்து எழுந்தாள் அருகில் வந்த திவ்யா. வேகமாக வீசியதில் அரு கிலிருந்த கற்குவியலின் மேல் விழுந்த பூமா அதிர்ச்சியில் மயக்கமடைந் தாள்.

அந்த இடம் முழுவதும் பரபரப் பானது. அருகில் இருந்த மருத்துவ மனைக்கு பூமாவைத் தூக்கிச் சென் றனர் மனிதாபிமானமிக்க சிலர். எப் படியோ சமாளித்து வீடு வந்து சேர்ந்த திவ்யாவிற்கு அதிர்ச்சியிலிருந்து மீள சில மணி நேரங்களாயிற்று. நடந் தவற்றை தன் பெற்றோரிடம் கூறிவிட்டு மருத்துவமனைக்கு பூமாவைக் காண விரைந்தாள் திவ்யா.

நூலிழையில் உயிர் பிழைத்த பூமா, லேசான காயங்களுடனும், கட்டு களுடனும் படுக்கையில் இருந்தாள்.

"வா, திவ்யா." திவ்யாவைப்





ஏலம் விடுபவர்: இந்த அழகிய கண்ணாடி டம்ளரின் விலை பத்து ரூபாய். ஒரு தரம்... இரண்டு தரம்... விடப் போகிறேன்... விடப் போகிறேன்...

ஒருவர்: அய்யோ! விட்டு விடாதீங்க. கண்ணாடி டம்ளர் கீழே விழுந்து உடைஞ்சிடப் போகுது!

– பாண்டமங்கலம் ஜி. குமரேசன்

பார்த்தவுடன் லேசாக எழுந்திருக்க முயன்று மீண்டும் படுத்துக் கொண்டாள். திவ்யாவும் வாஞ்சையுடன் பூமாவின் அருகில் சென்று அமர்ந்தாள்.

"திவ்யா, அந்தப் பெரியவர் மட்டும் என்னை சரியான நேரத்தில் காப்பாற்றியிருக்காவிட்டால் என் நிலைமை..." முடிப்பதற்குள் பேசினாள் திவ்யா. "இந்நேரம் கை காலாவது போயிருக்கும்."

"ஆமாம், ஆமாம்" ஆமோதித்தாள் பூமா. அவள் முகம் பயத்தில் வெளிறிப் போயிருந்தது. ஆனால் அதைச் சற்றும் சட்டை செய்யாமல் பேசினாள் திவ்யா. "பூமா உலகத்தில் யாருக்கும் எந்த நிலையும் நிரந்தரம் கிடையாது என்று என் அப்பா அடிக்கடி கூறுவார். நீயே யோசித்துப் பார். இந்த விபத்தில் உனக்கு சற்று பலமாக அடிபட்டிருந்தால்... நீ ஏதோ ஒருவகையில் நம் சுதாவைப் போல் ஊனமாகி இருப்பாய். அப்பொழுது உன் நிலை என்ன என்பதை எண்ணிப் பார்."

மௌனமாய் கண்களை மூடி அந்தப் பயங்கரத்தை உணர்ந்தாள் பூமா. தொடர்ந்தாள் திவ்யா: "பூமா, நினைத்தாலே நடுங்கும் சோகத்தை இந்தச் சின்ன வயதில் தாங்கினாலும், நம்மைப் போல் உடலில் ஒரு குறையும் இல்லாத சக மாணவிகளைப் பார்க்கும் பொழுது சுதாவின் மனம் என்ன பாடுபடும். அவளும் நம்மைப் போல் சிறு பெண்தானே..." சொல்லச் சொல்ல இலேசாகக் கண் கலங்கினாள் பூமா.


"ஊனமுற்றோர் கடவுளின் குழந்தைகள். நாம் அவர்களுக்குத் தொண்டு செய்தால் அது கடவுளுக்கு செய்தது போல்' என்று என் அம்மா எனக்குச் சொல்லியிருக்கிறார். சரி, பூமா, நான் வருகிறேன், நேரமாகிறது" என்று கூறிவிட்டு விடை பெற்றுச் சென்றாள் திவ்யா.

உடல் நலம் தேறி ஒருவாரம் கழித்து பள்ளி வந்த பூமா அடியோடு மாறிப் போயிருந்தாள். வித்தியாசம் எதுவுமின்றி வலிய வலிய பேசி மிக விரைவில் சுதாவின் தோழிகள் சிலருள் நெருங்கிய தோழியானாள். வகுப்பில் அனைவரிடமும் கலகலப்பாகப் பேசினாள். பாடத்தில் சந்தேகம் ஏற்பட்ட மாணவிகளுக்கு வலியச் சென்று உதவினாள். ஆசிரியைகள் உட்பட வகுப்பு மொத்தமும் 'பூமாவா இது' என வாய் பிளந்து ஆச்சர்யப்பட்டனர். திவ்யா மனதிற்குள் மிகுந்த சந்தோஷமும், திருப்தியும் அடைந்தாள்.

ஆண்டு முடிவில் வகுப்பில் சிறந்த மாணவிக்கான பரிசு பூமாவுக்கு என அறிவிக்கப்பட்டபோது எல்லோர் முன்னிலையிலும் மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையிலிருந்தாள் பூமா. "திவ்யா, இந்தப் பெருமையெல்லாம் உன்னைத்தான் சேரும். இந்தப் பரிசு என்னுடையது அல்ல, உன்னுடையது" என்று கண்களில் நீர் வழியக் கூறினாள் பூமா.

சக மாணவிகள் புரியாது விழித்தனர்.

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. குளக்கரையில் இருக்கும் அரசமரத்தடியே இவருக்குப் பிரியமான இடம் (5)

2. மெதுவாக நகரும். எதிரியைக் கண்டால் ஓட்டிற்குள் ஒளிந்து விடும் (3)

7. காஞ்சிபுரம் இந்த ஆடைக்குப் பெயர் பெற்றது (3)

8. இந்த நீர் உப்புக் கரிக்கும் (3)

12. பறவைகள் பறப்பதற்கு இது உதவுகிறது (3)

14. இரவணனின் மகன். இந்திரஜித் என்ற பெயரும் உண்டு (5)

வலமிருந்து இடம்

6. தாவரத்தைத் தவிர மற்ற உயிரினங்கள் இதன் கட்டளைப்படியே இயங்குகின்றன (2)

9. கர்ணனின் தாய் (3)

11. பயிர்களுக்கிடையே முளைக்கும். இதை உடனே அகற்ற வேண்டும். (2)

மேலிருந்து கீழ்

1. பாத்திரங்கள் செய்யப் பயன்படும் (4)

2. ஆறுகளை இப்படியும் அழைக்கலாம் (2)

3. மனித உடலில் உள்ள முக்கியமான சுரப்பி (4)

11. பறவைகளில் ஒன்று. பாம்பிற்கு எதிரி (4)

கீழிருந்து மேல்

4. இருட்டை இப்படியும் அழைக்கலாம் (3)

5. காந்தியடிகள் இந்த ஆடையையே பயன்படுத்தினார் (3)

8. கடல், ஆறு, குளம், ஏரிகளுக்கு இது இருக்கும் (2)

10. விலங்குகளுக்கு இந்த உறுப்பு முக்கியப் பணியாற்றுகிறது. இது மனிதனுக்கு இல்லை (2)

12. வலை பின்னும் பூச்சி (4)


13. வெய்யிலுக்கும் மழைக்கும் இது உதவும் (2)

14. வானில் தெரியும் வெள்ளை, கறுப்பு நிறத் திரள்கள் (3)

15. பழங்களில் ஒன்று. நீண்ட கதையையும் குறிக்கும் (3)

– ஆர். கவிதா,
சீர்காழி

விடை 68 ஆம் பக்கம்



இங்கேயே...

எங்கள் பக்கத்து வீட்டுப் பையன் எதை வாங்கினாலும் திருப்பித் தரவே மாட்டான். நான் வீட்டுப் பாடம் எழுதிக் கொண்டிருக்கும் போது அந்தப் பையன் வந்து, "அண்ணா பேனா தாயேன்" என்று கேட்டான். எனக்கு எழுத்து வேலை இருந்ததால், "இங்கேயே உட்கார்ந்து எழுதிட்டு பேனாவைத் திருப்பிக் கொடு" என்றேன். அவனும் அப்படியே செய்தான். மறுநாள் எங்கள் வீட்டை சுத்தம் செய்ய வேண்டியிருந்தது. நான் அந்தப் பையனிடம், "ஒட்டடைக் குச்சி வேணும்" என்றேன்.




அவன் "இங்கேயே வந்து ஒட்டடை அடிச்சிட்டு திருப்பிக் கொடு" என்றானே பார்க்கலாம்!

– வெ.அ. கார்த்திகேயன், வெள்ளோடு.

ஏரியா?

நானும் நண்பனும் ஓசூர் செல்வதற்காக பஸ்ஸில் பயணம் செய்தோம். இருவருக்கும் நல்ல தூக்கம். வண்டி நின்றது. திடீரென கண் விழித்துப் பார்த்தோம். எந்த ஊர் என்று தெரியவில்லை. என் நண்பன் கீழே நின்றிருந்தவரிடம் "இது என்ன ஏரியா?" என்று கேட்டான். அவர் எங்களை ஒரு மாதிரியாகப் பார்த்தார். மீண்டும் நண்பன் அதே கேள்வியைக் கேட்டான். அவருக்கு கோபம் வந்து. "இது



பஸ் ஸ்டாண்டு. பார்த்தால் தெரியலை, ஏரியா, குளமான்னு கிண்டலா பண்றே!" என்றார். பஸ்ஸில் மற்றவர்கள் சிரிக்க நாங்கள் அமைதியாக உட்கார்ந்திருந்தோம்.

– எம். ராஜதுரை, வரிக்கல்.

உடைந்த கால்!

ஊரிலிருந்து சித்தப்பா வந்திருந்தார். வீட்டிற்குள் நுழையும் போதே காலை நொண்டிக் கொண்டே வந்தார். நான்

இது என்ன


பதறிப் போய் "என்ன ஆச்சு சித்தப்பா?" என்றேன். "நீதான் என் காலை உடைத்து



விட்டாயே!'' என்றார். "நான் இங்கேயிருந்து ஊரில் இருக்கும் உங்கள் காலை எப்படி உடைக்க முடியும்?'' என்றேன். உடனே நான் எழுதியிருந்த கடிதத்தைக் காட்டி "இதோ நீ, ராஜு சித்தப்பா என்பதற்கு பதில் ரஜு சித்தப்பா என்று எழுதி காலை உடைச்சிட்டியே!'' என்றார். வீட்டில் அனைவரும் என்னைப் பார்த்து சிரித்தனர்.

— மு. கந்தவேல், தாரமங்கலம்.

கேட்காமலே...



நாங்கள் கோழி வளர்க்கிறோம். ஒரு நாள் கோழிக்குஞ்சு ஒன்றை பூனை தூக்கிச் சென்று விட்டது. அதைப் பற்றி எல்லோரும் பேசிக் கொண்டிருக்கும் போது எல்.கே.ஜி. படிக்கும் என் தம்பி, "அம்மா 'கேட்' தூக்கிட்டுப் போச்சா?" என்று கேட்டான். அதைக் கேட்ட பாட்டி, "அசட்டுப் பயலே! பூனை கேட்டுட்டா தூக்கும். கேட்காமலேயே தூக்கிட்டுப் போச்சுடா" என்றவுடன் பாட்டியைத் தவிர அனைவரும் சிரித்தோம்.

— எஸ். கவிதா, ஆறாம் வகுப்பு, நெல்லை.

ஏரியா?

சாரி!

நானும் தங்கையும் விளையாடிக் கொண்டிருந்தோம். ஊரிலிருந்து மாமா வந்தார். விளையாட்டைப் பாதியில் விட்டு விட்டு வீட்டிற்கு ஓடினோம். வேகமாக நுழைந்ததில் என் தங்கை மாமாவின் காலை மிதித்து விட்டாள். உடனே "சாரி மாமா!" என்றாள். "இந்த வயசிலேயே சாரி கேட்கறியே! நான் உனக்கு மிடிதான் வாங்கியிருக்கேன்'' என்று சொல்லி புதுத் துணியை எடுத்துக் கொடுத்தார். சிறிது நேரம் கழித்தே எங்களுக்கு விஷயம் புரிந்தது.




— எம். கல்யாணசுந்தரம், கும்பகோணம்.

சாமான் எங்கே?

தம்பியிடம் கடிதத்தை தபால் பெட்டியில் போடச் சொன்னேன். என் அம்மா "அப்படியே சாமான் வாங்கிட்டு வா" என்று கூறி பணத்தைக் கொடுத்தார். அவனும் ஒரு கையில் கடிதத்தையும், இன்னொரு கையில் பணத்தையும் பிடித்துக் கொண்டு கிளம்பினான். சிறிது நேரம் கழித்து கையில் கடிதத்துடன் திரும்பி வந்தான். "ஏண்டா சாமான் வாங்கிட்டு வரலையா?" என்று கேட்டார் அம்மா. அவன் கவலையுடன் "இல்லம்மா. தபால் பெட்டியில் கடிதத்தை போடுவதற்குப் பதில், பணத்தைப் போட்டுட்டேன்" என்றான்!

— மா. மகேஷ், தாரமங்கலம், சேலம் மாவட்டம்.





விடுகதை பக்கம்

1) மணி அடித்தால் மலைப்பாம்பு நகரும்.

2) உயிரில்லாத பறவை ஊர் ஊராகப் பறக்கும்.

3) எட்டாக் கொம்பில் மிட்டாய் பொட்டலம்.

4) உரித்து விட்டக் குருவி ஊருக்குப் போகிறது

5) ராசா மகள் பூ இல்லாமல் சடை போட மாட்டாள்.

6) இரண்டு வீட்டுக்கு ஒரு விட்டம்.

7) சின்னஞ்சிறு வீட்டிலே சிப்பாய்கள் பல பேர்.

– பொன் திருவரங்கன்,
ஐந்தாம் வகுப்பு 'அ' பிரிவு
ஆர். சி. நடுநிலைப்பள்ளி, மானாமதுரை

விடை: 1) ரயில், 2) கடிதம், 3) தேன் கூடு, 4) புளி, 5) முருங்கைக்காய், 6) படி உழக்குகள்

1. கால் உண்டு நடக்க மாட்டான். அவன் யார்?

2. பூ உண்டு மணம் இல்லை. இலை உண்டு கிளை இல்லை. அது என்ன?

3. வெல்லம் வச்சேன். ஈயும் மொய்க்கலை, எறும்பும் மொய்க்கலை. அது என்ன?

ந. வேண்டாமிர்தம், திண்டிவனம்

விடை: 1) நாற்காலி, 2) வாழை மரம், 3) நெருப்பு

1) எண்ணும் முள்ளும் இல்லாத கடிகாரம். நின்று போனால் மறுபடி ஒலிக்காத கடிகாரம். அது என்ன?

2) வீட்டைச் சுற்றி வேலி. அது என்ன?

3) திறக்க முடியும், மூட முடியாது. அது என்ன?

4) அக்கா கண் சிமிட்டினாள். தங்கை கூச்சல் போட்டாள். அம்மா அழுதாள். யார் அவர்கள்?

டி. அர்ச்சனா, சென்னை

விடை: 1) இதயம், 2) இமைகள், 3) தேங்காய், 4) மின்னல், இடி, மழை

1) ஓடும். ஆனால் இருக்கும் இடத்தை விட்டு அசையாது.

2) இணை பிரிய மாட்டார்கள். நண்பர்கள் அல்ல, ஒன்று சேர மாட்டார்கள் பகைவர்கள் அல்ல

3) ஒற்றைக் காலில் ஆடுவான் ஓய்ந்துப் போனால் படுப்பான்.

4) கண்டது இருவர், எடுத்தது பத்து பேர். உண்டது ஒருவர்.

5. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும். முக்காடு போட்டால் மூலையில் அமரும். அது என்ன?

எஸ்.பி. சுப்பராகவன், திருவாரூர்

விடை: 1. கடிகாரம், 2. ரயில் தண்டவாளம், 3. பம்பரம், 4. கண்/கை விரல்கள்/ வாய், 5. பேனா

1) வண்ணான் வெளுக்காத வெள்ளை, குயவன் பண்ணாத பாண்டம்,

மழை பெய்யாத தண்ணீர் – அது என்ன?


2) பூவிருக்கப் பிஞ்சு தின்றேன். அது என்ன?

3) பச்சைக் கிளி, பறக்கத் தெரியாத கிளி, கொம்பில் இருக்கும் குள்ளக்கிளி – அது என்ன?

4) தீப்பொறி பறக்கிறது. தொட்டால் சுடாது – அது என்ன?

க. நஞ்சையன்,
திண்டுக்கல்

விடை: 1) தேங்காய், 2) வெள்ளிப்பிஞ்சு, 3) மாங்காய், 4) மின்மினி



அதிசயச் சகோதரர்கள்!

தேசபந்து

ஐந்து சகோதரர்கள் சைனாவில் ஒரு கடலோரக் கிராமத்தில் வாழ்ந்து வந்தார்கள். ஒரே அச்சில் வார்த்தெடுத்தது போல் ஐந்து பேரும் ஒரே மாதிரி இருப்பார்கள்.

அவர்களுடைய அப்பா சின்ன வயதிலேயே இறந்து விட்டார். அம்மா மட்டும் தான் இருந்தாள். ஐந்து பேரும் வெளியில் சென்று ஏதாவது வேலை செய்து சம்பாதித்துக் கொண்டு வருவார்கள். அம்மா சமைத்துப் போடுவார்.

ஐந்து பேரில் ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொருவிதமான திறமை இருந்தது. அது என்னென்ன என்று ஊருக்குள் மற்றவர்களுக்குத் தெரியாது. ஏன், அவர்களுடைய அம்மாவுக்கே கூடத் தெரியாது.

முதல் சகோதரன் சமுத்திரத் தண்ணீர் முழுவதையும் உறிஞ்சி வைத்திருந்து துப்புவான்.

இரண்டாம் சகோதரனின் கழுத்து இரும்பினால் ஆனது.

மூன்றாவது சகோதரன் நினைத்தால் தன் கால்களை எத்தனை தூரம் வேண்டுமானாலும் நீட்ட முடியும்.

நான்காவது சகோதரனை நெருப்பு எதுவும் செய்யாது.

ஐந்தாவது சகோதரன் நாட்கணக்கில், மூச்சை இழுத்துப் பிடித்து வைத்திருந்து எழுந்திருப்பான்.

ஒருநாள் முதல் சகோதரன் மீன் பிடித்து வருவதாய்ச் சொல்லிக் கொண்டு கிளம்பினான்.

அப்போது இரவு நேரம். மீன் பிடிக்கச் சென்றவர்கள் எல்லாம் வேலை முடித்து திரும்பினர். அந்த நேரத்தில் முதல் சகோதரன் வலை எடுத்துக் கொண்டு செல்வதைக் கண்டு எதிர்ப்பட்ட மீனவர்கள், 'பைத்தியக்காரப் பிள்ளை,' என்று கேலி செய்து சிரித்தார்கள்.

ஆனால் அவனுக்குத் தெரிந்த யூஸாங் என்ற பையன் மட்டும் சிரிக்கவில்லை. அவனும் மீனவன்தான். அன்று முழுவதும் தூண்டில் போட்டும் அவனுக்கு ஒரு மீனும் கிடைக்கவில்லை. அந்தச் சோகத்தில் இருந்த அவனுக்கு எப்படிச் சிரிப்பு வரும்?

'முதல் சகோதரன் இந்த நேரத்தில் மீன் பிடிக்கப் போகிறானே! ஒருவேளை, இந்த நேரத்தில் வலை வீசினால் மீன் கிடைக்கும் போலிருக்கிறது', என்று யூஸாங்குக்கு ஒரு சபலம்.

அவன் முதல் சகோதரனை நெருங்கி, "அண்ணா, நானும் உன் கூட மீன் பிடிக்க வர்றேனே!" என்று கேட்டான்.

முதல் சகோதரன் பின்வாங்கினான். "வேணாம் தம்பி. நான் மீன் பிடிக்கத் தனியாப் போறதுதான் வழக்கம். நீதான் போய் வந்தாச்சே! நாளைக்குப் போயேன்," என்று தட்டிக் கழிக்கப் பார்த்தான்.

யூஸாங் கெஞ்சினான். கண்கலங்கினான். "இதோ மீன் கூடையைப் பார். ஒரு மீன் கூடச் சிக்கலை. சாப்பாட்டுக்கே



''சோம்பேறித்தனத்துக்கு உங்களுக்கு முதல் பரிசு கிடைச்சிருக்கு... விழாவிலே வந்து வாங்கிக்குங்க!''

''அங்கே யாருங்க வர்றது! பரிசைக் கொண்டு வந்து கொடுத்துட்டுப் போங்க!''

– பாலு

வழியில்லை. நீ தினமும் நிறைய மீன் கொண்டு வருவதைப் பார்த்திருக்கேன். தயவுபண்ணி என்னையும் கூட்டிப் போ. நீ சொல்றபடியெல்லாம் கேட்கிறேன்,'' என்று அவன் காலில் விழுந்தான்.

முதல் சகோதரனுக்குப் பாவமாய் இருந்தது. சற்று யோசித்து, "நான் சொல்றபடியெல்லாம் கேப்பியா?" என்று அவனைத் தூக்கி நிறுத்தினான்.

யூஸாங் கண்களைத் துடைத்துக் கொண்டு, "எது சொன்னாலும் செய்றேன்," என்றான்.

"சரி. கவனமாக் கேட்டுக்கோ. மீன் பிடிக்கிற போது பேச மாட்டேன். என்னால பேச முடியாது. நீ என்னையே கவனிச்சிட்டிருக்கணும். நான் சைகைதான் செய்வேன். நான் சைகையிலே என்ன செய்யச் சொல்றேனோ அப்படியே செய்யணும். செய்வியா?"

யூஸாங் தலையாட்டிச் சம்மதம் தெரிவித்தான். அத்தோடு பரிசோதனையாக முதல் சகோதரன் ஜாடை காட்டியதையெல்லாம் புரிந்து கொண்டு, அவன் குறிப்பறிந்து அதன்படியே செயல்பட்டான்.

முதல் சகோதரனும் திருப்தியோடு யூஸாங்கை அழைத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்தான்.

யூஸாங் பயந்து போய், "அண்ணா, இருட்டிலே ஒண்ணுமே தெரியலையே! எப்படி மீன் பிடிக்கிறது?" என்றான்.

"இப்ப பாரு வெளிச்சமும் வரும். அதிலே மீன்களும் தெரியும். வேணும்கிற வரைக்கும் அள்ளிப் போட்டுக்க" என்று சமுத்திரக் கரையில் குனிந்தான்.

அவனிடம் உள்ள தனித் திறமையைப் பயன்படுத்தி சமுத்திர நீரை சர்ரென்று உறிஞ்சினான். கடல் நீரே வற்றிப் போனதால், அடித் தளத்திலிருந்த முத்தும் பவழமும் வேறு பல ஒளிக் கற்களுமாய் உமிழ்ந்த வெளிச்சத்தில் யூஸாங் பிரமித்தான். மீன் வகைகள் கைக்கெட்டும் தூரத்தில் துள்ளின.

இப்போது யூஸாங்கைக் கவர்ந்தவை அவன் தேடி வந்த மீன்கள் அல்ல; மிதமிஞ்சிய மதிப்பு வாய்ந்த முத்தும் பவழமும்தான். வேக வேகமாய் அவற்றைத் திரட்டி, தான் கொண்டு வந்திருந்த பைகளுக்குள் முடிந்தவரை திணித்துக் கொண்டான். அந்த மும்முரத்தில் அவன் முதல் சகோதரனுக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்து விட்டான். அவனைத் திரும்பியே பார்க்கவில்லை.

முதல் சகோதரனால் பேச முடியவில்லை. 'போதும், கரையேறி விடு,' என்று சீண்டிச் சீண்டி ஜாடை காட்டுகிறான் அவன். யூஸாங்கோ அவனைக் கவனிக்கவோ, பொருட்படுத்தவோ இல்லை.

முதல் சகோதரனால் எத்தனை நேரத்துக்குத்தான் தாக்குப்பிடிக்க முடியும்? அவன் உள்ளுக்குள் அடக்கி வைத்திருந்த சமுத்திர நீர் அவன் மூச்சைத் திணறடித்தது. தாக்குப்பிடிக்க முடியவில்லை. அவன் கரையேறி வந்தான். திரும்பத் திரும்ப ஜாடை காட்டினான்.

யூஸாங் திரும்பிப் பார்த்தால்தானே? முதல் சகோதரனுக்கு உயிரே போய்விடும் போல் இருந்தது.

என்ன பாடுபட்டும் யூஸாங்கின் கவனத்தைக் கரைக்கு இழுக்க முடியவில்லை. இதற்கு மேலும் சமாளிக்க முடியாது. முதல் சகோதரன் வாய் திறந்து விட்டான்!

அவ்வளவுதான். அவன் வயிற்றில் அடங்கியிருந்த சமுத்திர நீர் குபீரென்று வெளிப் பாய்ந்து பழையபடி சமுத்திரத்தை நிரப்பி விட்டது.

யூஸாங்கை அவனால் காப்பாற்ற முடியவில்லை.

'பாவி யூஸாங்! என்னால் பேச முடியாது, நான் ஜாடை காட்டுவது போல் நடந்து கொள் என்று படித்துப் படித்துச் சொன்னேனே! என்று வருந்தி

ஊர் திரும்பினான்.

ஊருக்குள் இருந்த மீனவர்கள் பலரும் முதல் சகோதரனோடு யூஸாங் சென்றதைப் பார்த்திருக்கிறார்கள். இப்போது அவன் மட்டும் திரும்பியிருக்கிறான். யூஸாங் என்ன ஆனான்?

யூஸாங்கின் பெற்றோர் இரண்டு மூன்று நாட்கள் காத்திருந்தார்கள். யூஸாங்கும் திரும்பவில்லை. அவனைப் பற்றிய தகவலும் இல்லை. மீனவர்களை விசாரித்த போது யூஸாங் காணாமல் போனதற்கு முதல் சகோதரன்தான் பொறுப்பு என்று ஒரே மனதாய்ச் சொன்னார்கள்.

எனவே, முதல் சகோதரனை இழுத்து வந்து பஞ்சாயத்தில் நிறுத்தி விசாரித்தார்கள். யூஸாங்கை அன்று இரவு மீன் பிடிக்க அழைத்துப் போனது தான்தான் என்கிற வரை முதல் சகோதரன் ஒப்புக் கொண்டான். அப்புறம் யூஸாங் என்ன ஆனான் என்று கேட்டதற்கு, அவனிடம் பதில் இல்லை. துருவித் துருவிக் கேட்ட போது, "கடலடியில் சிக்கிக் கொண்டு விட்டான். அதற்குக் காரணம் அவன் தான்... நான்தான்," என்று உளறினான்.

கடைசியில் பஞ்சாயத்தார், முதல் சகோதரன் கொலைகாரன்; அவனுக்கு மரண தண்டனை என்று தீர்ப்புச் சொல்லி விட்டார்கள்.

அந்தத் தீர்ப்புக் கேட்டு முதல் சகோதரன் அதிர்ச்சி அடையவில்லை. தனக்கு இந்தத் தண்டனை தேவைதான் என்கிற மாதிரி இருந்தான். பிறகு சொன்னான் :

"ஐயா, நான் சாகப் போறதுக்கு முன்னாடி என் அம்மாகிட்ட சொல்லிட்டு வந்துடறேன்," என்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டான்.

பஞ்சாயத்தாரும், "அது நியாயம்தானே? போய் சொல்லிட்டு வந்துடு" என்று அனுப்பி வைத்தார்கள்.

முதல் சகோதரன் எல்லோரையும் வணங்கி விட்டுப் புறப்பட்டுப் போனான்.


அந்தக் காலத்தில் மரண தண்டனை என்றால் சிரச் சேதம்தான். அதாவது கழுத்தைக் கோடரியால் ஒரே வெட்டாய் வெட்டுவது!

தாயிடம் சொல்லிக் கொண்டு திரும்பி வந்தான். அவனது கைகளை முதுகுப் பக்கம் சேர்த்துக் கட்டி வெட்டுப் பாறைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு குனிய வைத்து அகலமான கோடரியால் அவன் கழுத்தைக் குறிவைத்து ஒரே போடாய் ஓர் ஆள் போட்டான்.

அடுத்தகணம் கோடரி முனையில் தீப்பொறி தெறிக்க, அது அந்தக் கழுத்தை விட்டு எகிறி விழுந்தது! சினச் சகோதரன் சிரித்துக் கொண்டு தலைநிமிர்ந்து பார்த்தான்.

ஆகா, எப்படி நிகழ்ந்தது இந்த அதிசயம்!

அம்மாவைப் பார்க்கப் போவதாய்ச் சொன்ன முதல் சகோதரன் வீட்டுக்குள் சென்றதும் தனக்குப் பதிலாக இரண்டாவது சகோதரனை அனுப்பி வைத்து விட்டான்.



பஞ்சாயத்தாருக்கு மர்மம் புரிய வில்லை. இருந்தாலும் அவனுக்குத் தண்டனை தருவதில் தீவிரமாய் இருந்தார்கள். இந்த முறை, "எந்தச் சமுத்திரத்திலே யூஸாங் முழுகினானோ, அதிலேயே இவனையும் முழுகடிச்சுடுங்க." என்று பஞ்சாயத்தார் தீர்ப்புச் சொன்னார்கள்.

இப்போது இரண்டாவது சகோதரன், "ஐயா, நான் என் அம்மாகிட்ட சொல்லிட்டு வந்துடறேன்," என்று பணிவோடு கேட்டுக் கொண்டான்.

பஞ்சாயத்தாரும், அனுப்பி வைத்தார்கள்.

தாயிடம் சொல்லிக் கொண்டு திரும்பி வந்தவனை நடுக்கடலுக்குக் கொண்டு சென்றார்கள். கப்பலிலிருந்து கடலில் தள்ளி விட்டு, அவன் மூழ்கினானா என்று ஒதுங்கி நின்று கண்காணித்துக் கொண்டிருந்தார்கள்.

என்ன ஆச்சரியம்! கடலில் தூக்கி எறியப்பட்டவன், கடல் மட்டத்துக்கு மேல் சொகுசாக நின்று கொண்டிருந்தான். கப்பலுக்கு முன்னால் கரை வந்து சேர்ந்து விட்டான்.

தாயைப் பார்ப்பதாய் வீட்டுக்குள் சென்ற இரண்டாவது சகோதரன் இந்த முறை மூன்றாவது சகோதரனைப் பஞ்சாயத்துக்கு அனுப்பி வைத்தான்.

மூன்றாவது சகோதரனுக்குத்தான் எத்தனை நீளமாகவும் கால்களை நீட்டிக் கொள்ளும் தனித் திறமை உண்டே!

இப்போதும் பஞ்சாயத்தாருக்கு இது ஏதோ தந்திரம்; இவனுக்குத் தண்டனை வழங்கியே தீரவேண்டும் என்று தோன்றியது. இந்த முறை ஊர் கூடி பெரிய தீக்குண்டம் வளர்த்து, அதிலே அவனைத் தூக்கிப் போட்டு மரணதண்டனை அளிப்பது என்று முடிவெடுத்தார்கள்.

அதற்கான ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்ததும் மூன்றாவது சகோதரன், 'ஐயா, நான் அம்மாவைப் பார்த்துச் சொல்லிட்டு வந்துடறேன்,' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

பஞ்சாயத்தாரும் விடைகொடுத்து அனுப்பினர்.

அம்மாவைப் பார்த்து விட்டு அவன் வெளிவந்ததும், அப்படியே இழுத்துக் கொண்டு போய்க் கொழுந்து விட்டு எரியும் நெருப்புக் குண்டத்திலே தூக்கிப் போட்டார்கள். 'இந்த முறை அவன் கருகிச் சாக வேண்டியதுதான்' என்று கவனித்துப் பார்த்தார்கள்.

நெருப்புக்கு நடுவிலே சிரிப்புத்தான் கேட்டது. அவனது தலைமுடிக்குக் கூட எந்தப் பாதிப்பும் நேரவில்லை. கோடை வெய்யிலில் குற்றால அருவியில் குளிப்பது போல் தீ நடுவில் திளைத்துக் கொண்டிருந்தான் அவன்.

எப்படி இந்த அதிசயம் நிகழ்ந்தது? மூன்றாவது சகோதரன், தங்கிக் கொண்டு நாலாவது சகோதரனை அனுப்பி வைத்து விட்டான்.


பஞ்சாயத்தாருக்கு ஆத்திரம் பீறிட்டது. கடைசி முறையாய், அவனுக்கு மீள முடியாத பயங்கரத் தண்டனை விதிக்க வேண்டும் என்று கலந்து பேசினார்கள்.

இப்போது அவனை உயிருடனே புதைத்து விடுவது என்று தீர்மானித்தார்கள்.

அதைக் கேட்டதும் நாலாவது சகோதரன், "ஐயா, அம்மாகிட்ட சொல் விட்டு வந்துடறேன்"' என்று கேட்டுக் கொண்டான்.

பஞ்சாயத்தாரும் அவனுக்கு அனுமதி அளித்தார்கள்.

'இந்த முறை எப்படித் தப்பிக்க முடி



"உங்க அப்பாவுக்குப் பூ வியாபாரமா?"

"எப்படி சரியாக் கண்டுபிடிச்ச?"

"பேச்சு வார்த்தைன்னு வந்தா நார் நாரா கிழிச்சுடுவேன்னு சொல்றாரே!"

— காழி. ஆர். சீதாராமன்



யும் பார்த்து விடுவோம்,' என்று கறுவிக் கொண்டே அவனை அந்த ஆழமான குழிக்குள் இறக்கி, அத்தனை பேரும் சேர்ந்து மண்ணை மூடினார்கள். அதற்கு மேலே சிமெண்ட் பூசிச் சமாதி வைத்தார்கள்.

இந்த முறை நிச்சயம் சீனச் சகோதரன் செத்து மடிந்திருக்க வேண்டும். இருந்தாலும் ஒரு சந்தேகம் கிளப்பினார்கள் சிலர். அவன்தான் மாயக்காரனாச்சே! சமாதியிலிருந்து அப்படியே மாயமாய் மறைந்து போயிருப்பான் என்றார்கள். அப்படியும் இருக்கலாமோ? சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளச் சமாதியைப் பெயர்த்துப் பார்த்துவிடலாம் என்று தீர்மானித்தார்கள்.

அதன்படியே புதைத்தவனைப் பரிசீலிக்க அந்தச் சமாதியைத் தோண்டி எடுத்தார்கள். உள்ளே புதைத்தவாறே சீனச் சகோதரன் கிடந்தான். வெய்யில் பட்டதும் தூக்கம் கலைந்தாற்போல் நெளிந்து கொண்டு எழுந்தான்.

நாலு நாள் முன் புதையுண்டவன் இன்று உயிருடன் எழுந்ததை மற்றவர்கள் நம்ப மாட்டாதவர்களாய் தங்களுக்குள் கூடிக் கூடிப் பேசிக் கொண்டார்கள்.

ஒருமுறை இரண்டு முறை அல்ல; நாலு முறை விதவிதமான மரண தண்டனை கொடுத்தும் பயனில்லை. தப்பு அவன் மேலா, தங்கள் மேலா என்று அவர்களுக்கே சந்தேகமாய்ப் போய் விட்டது.

அவன் மேல் தவறு இருந்தால், இத்தனை தண்டனைகளில் ஒன்றிலாவது அவன் இறந்திருக்க வேண்டும். என்ன செய்தும் அவன் இறக்கவில்லை என்றால் அவன் தவறு செய்யவில்லை என்றுதான் அர்த்தம். அதனால் அவனை விட்டு விட வேண்டும் என்று பேசி முடிவெடுத்தார்கள்.

ஐந்து சகோதரர்கள் உருவ ஒற்றுமையோடு பலவித திறமைகளோடு இருந்தாலும், தங்களுக்குள் ஒற்றுமையாய் இருந்ததால்தான் உயிருக்கு ஆபத்து வராமல் பிழைத்தார்கள்.

குள்ள மனிதன்!

மாயாபுரி என்ற ஊரில் சந்திரன் வாழ்ந்து வந்தான். அவன் தினமும் காட்டிற்குச் சென்று வேட்டையாடி, மரங்களை வெட்டிப் பிழைப்பு நடத்தி வந்தான். ஒருநாள் அவன் காட்டிற்குச் செல்லும் போது வித்தியாசமான மரம் ஒன்றைக் கண்டான். அந்த மரத்தை வெட்ட ஆரம்பித்தான்.

என்ன ஆச்சரியம்! மரத்தின் நடுவே ஒரு வழி தென்பட்டது. உள்ளே சென்று பார்த்தான் சந்திரன். அங்கே ஒரு ஜாடி இருந்தது. அந்த ஜாடியைத் திறந்தான். புகை மண்டலம் ஜாடியிலிருந்து கிளம்பியது. அந்தப் புகை மண்டலம் மறைந்தவுடன் ஒரு குள்ள மனிதன் தென்பட்டான். குள்ள மனிதன் சந்திரனைப் பார்த்து, "நான் உனக்கு அடிமை" என்று கூறினான்.

குள்ள மனிதன் சந்திரனை இழுத்துக் கொண்டு வெளியே வந்த அடுத்த நிமிடம் மரம் மாயமாக மறைந்து போனது. உடனே சந்திரன், "உன்னை அடிமையாக வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது?" என்று கூறினான். அதைக் கேட்ட குள்ள மனிதன் ஒரு ஊது ஊதினான். சந்திரன் ஐம்பது அடி பின்னால் சென்று விழுந்தான். குள்ள மனிதன் சந்திரனிடம் மன்னிப்புக் கேட்டான்.

"உனது சக்தியை நான் அறிந்து கொண்டு விட்டேன். இருந்தாலும் இன்னொரு பந்தயம் வைத்துக் கொள்ளலாம். என் குடிசையை மாளிகையாக்கு பார்க்கலாம்" என்று கூறினான் சந்திரன். "இது என்ன பிரமாதம்?" என்று கூறி சந்திரனின் குடிசையை மாளிகையாக்கினான் குள்ள மனிதன்.

பின் அதில் சந்திரனும் குள்ள மனிதனும் எல்லா சுகபோகங்களுடன் சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர். திடீரென ஒருநாள் குள்ள மனிதன் சோகமாக உட்கார்ந்து கொண்டிருந்தான். "ஏன் சோகமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டான் சந்திரன். அதற்கு குள்ள மனிதன், "என்னை அடிமையாக்குவதற்கு இந்த உலகில் ஒரே ஒரு சக்திதான் உள்ளது. அவள்தான் பாலீஸ்வரி. அவள் ஒரு சூனியக்காரி" என்றான்.

"அதற்கு ஏன் இப்போது வருந்துகிறாய்?" என்று கேட்டான் சந்திரன்.

"அவள் என்னை அடிமையாக்குவதற்காக இந்த ஊருக்கு வந்து விட்டாள்" என்று வருத்தத்துடன் கூறினான் குள்ள மனிதன்.

"அவளிடம்தான் நிறைய சக்தி உள்ளதே? அப்புறம் ஏன் உன்னை அடிமையாக்க விரும்புகிறாள்?"

அதற்குக் குள்ள மனிதன், "அவள் என்னை அடிமையாக்கி விட்டால் இந்தப் பிரபஞ்சமே அவள் காலடியில்" என்று கூறி முடிப்பதற்குள் திடீரென இடி இடித்தது.

உடனே அவர்கள் முன் ஒரு பெரிய பூதம் தோன்றியது. அது குள்ள மனிதனையும் சந்திரனையும் பிடித்துக் கொண்டு ஆகாயத்தில் பறக்கத் தொடங்கியது. தன் மாய சக்தியைப் பயன்படுத்தி அந்தப் பூதத்தை அழித்தான் குள்ள மனிதன். அவர்கள் ஒரு வீட்டின் மேலே போய் விழுந்தனர். அங்கே! அவர்கள் முற்றிலும் எதிர்பாராத அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது.

பாலீஸ்வரி நின்று கொண்டிருந்தாள். அவள் அவர்களை ஒரு மாய சிறையில் அடைத்தாள். "உங்களை பிறகு வந்து பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறிச் சென்று விட்டாள் பாலீஸ்வரி. சந்திரன் குள்ள மனிதனிடம், "உன்னை பாலீஸ்வரி மட்டும் எப்படி அடிமையாக்க முடியும்?"

என்று கேட்டான். அதற்கு குள்ள மனிதன், "அவளிடம் ஒரு மாய நீர் இருக்கிறது. அதை என் மீது தெளித்தால் நான் அடிமையாகி விடுவேன்" என்றான்.

"சரி வா! இங்கிருந்து தப்பித்து விடுவோம்" என்று கூறினான் சந்திரன்.

"என்னால் தப்பிக்க முடியாது, உன்னை மட்டும் வேண்டுமானால் தப்பிக்க வைக்க முடியும். நீ தப்பித்தால் பாலீஸ்வரியின் உயிருக்கு உலை வைக்கலாம். இந்த வரைபடத்தை வைத்துக் கொள். நீ வெளியே சென்றால் அங்கே உனக்காக ஒரு பறக்கும் குதிரை காத்துக் கொண்டிருக்கும். அதில் ஏறி பாலீஸ்வரியின் உயிர் இருக்கும் இடத்தை அடையலாம். அங்கே இரண்டு மெழுகுவர்த்திகள் இருக்கும். அதை நீ தாமதிக்காமல் இங்கே எடுத்து வா!" என்று கூறி அவனைத் தப்பிக்க வைத்தான் குள்ள மனிதன்.




வெளியில் குள்ள மனிதன் கூறியது போல் ஒரு பறக்கும் குதிரை காத்துக் கொண்டிருந்தது. அதில் ஏறி மலைகள், கடல்களைத் தாண்டி பாலீஸ்வரி உயிர் இருக்கும் இடத்தைச் சென்றடைந்தான் சந்திரன். அங்கு இரண்டு மெழுகுவர்த்திகள் இருந்தன. அதை எடுத்துக் கொண்டு மீண்டும் குள்ள மனிதன் இருக்கும் இடத்திற்கு வந்தான். அங்கே குள்ள மனிதனும் பாலீஸ்வரியும் மோதிக் கொண்டிருந்தனர்.

சந்திரனைக் கண்ட குள்ள மனிதன், "மெழுகுவர்த்தியை அணைத்து நெருப்பில் போடு!" என்று கூறினான். உடனே சந்திரன் ஒரு மெழுகுவர்த்தியை மட்டும் அணைத்து நெருப்பில் போட்டான். பாலீஸ்வரி பனியைப் போல உருகி தண்ணீராய் மாறினாள்! அடுத்த நொடியே தண்ணீர்த் துளிகளெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து பாலீஸ்வரி உருவானாள். இன்னொரு மெழுகுவர்த்தியையும் சந்திரன் ஊதி நெருப்பில் போட்டான். பாலீஸ்வரி அப்படியே உருகி ஆவியானாள்.

சந்திரனும் குள்ள மனிதனும் அதற்குப் பிறகு நீண்ட நாட்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

– கு. பிரசன்ன குமார்
எட்டாம் வகுப்பு
திருவான்மியூர், சென்னை.



மாடு ஏமாற்றுமா?

காலாண்டு விடுமுறையில் பட்டணத்திலிருந்து கிராமத்திலுள்ள தன் தாத்தா வீட்டிற்குச் சென்றான் ரகு. பசுமை நிறைந்த வயல்வெளிகளையும், காய் கனிகள் நிறைந்த தோப்புகளையும் சுற்றிப் பார்த்தவாறு நாட்களைக் கழித்தான்.

ஒருநாள் தன் தாத்தா செக்கில் மாட்டைக் கட்டி எண்ணெய் ஆட்டுவதைக் கண்டான். செக்கில் மாட்டைக் கட்டிவிட்டு அவர் மற்ற வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். மாடு செக்கைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

ரகுவிற்கோ ஒரே ஆச்சரியம்! தாத்தா தன்னுடைய வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார், மாடு செக்கைச் சுற்றாமல் நின்றால் தாத்தா எப்படி கண்டு பிடிப்பாரென்று. அதை தன் தாத்தாவிடமே கேட்டான்.

"தாத்தா! நீங்கள் வேறு வேலை செய்து கொண்டிருக்கும்போது மாடு செக்கைச் சுற்றாமல் நின்று விட்டால் நீங்கள் எப்படி கண்டுபிடிப்பீர்கள்?" என்று கேட்டான்.

"மாட்டின் கழுத்தில் ஒரு மணி கட்டி இருக்கேனே அது மாடு சுத்தும்போது ஒலி எழுப்பும். மாடு நின்று விட்டால் ஒலி வராது. அதை வைத்து மாடு சுற்றவில்லை என்பதைத் தெரிந்து கொள்வேன்" என்றார் தாத்தா.

"மாடு சுற்றாமல் நின்று கொண்டு கழுத்தை மட்டும் ஆட்டி மணியின் சத்தத்தை எழுப்பினால் என்ன செய்வீர்கள்?" என்று மடக்கினான் ரகு.

"மாடு நம்மை மாதிரி இல்லை. அதற்கு பிறரை ஏமாற்றத் தெரியாது" என்று தாத்தா பதில் சொன்னார்.

சக்தி. சரவணன்,
மோகனூர்.


சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!

படம் : லலிதா




சந்தையில் –
ஐயா இந்த ஆடைகளை எடுத்துக் கொண்டு பணம் தாருங்கள்.
எங்கே போறே சிந்துபாத்?
இந்தப் பணத்தை வைத்து வெளிநாடுகளுக்குப் போறேன்
நல்லபடியா போயிட்டு செல்வந்தனா திரும்பி வா.
கிடைத்த பணத்தில் சில பொருட்களை வாங்கினான்.
துறைமுகத்தை அடைந்தான்.
அதோ கப்பல் கிளம்பத் தயாரா இருக்கே!


ஐயா இந்தக் கப்பல் எங்கே போகுது?
பஸ்ராப் பட்டணம்
கப்பலில் ஏறினான்.
ம்... வீட்டை விட்டு, நாட்டை விட்டு, நாடோடி மாதிரி என் நிலை ஏன் இப்படி?


பல நாட்கள் பயணம் செய்த பின் கப்பல் ஒரு தீவை அடைந்தது.
பயணிகள் இறங்கினர்
அடுப்பு பற்ற வைத்து சமைக்கலாமா?
ம்! சீக்கிரம்
தீவில் இறங்கிய சிந்துபாத் தனிமை, யான இடத்தை நாடிச் சென்றான். அப்போது –
இதென்ன நிலநடுக்கம் மாதிரி இருக்கே...!
அமைப்பு: விஜி
(தொடரும்)

மாங்கொல்லை என்ற ஊரில் மாணிக்கம் என்ற பணக்காரர் இருந்தார். அவருக்குப் பணம் இருக்கிற அளவிற்கு மனம் கிடையாது. தன்னிடமுள்ள வேலையாட்களுக்குத் தகுந்த சம்பளம் தரமாட்டார். இதனால் வேலையாட்கள் சேருவதும், சொல்லிக்காமல் ஓடுவதுமாக இருந்தனர்.

இதனால் மாணிக்கம் கவலை அடைந்தார். 'தனக்கு இரவும் பகலும்



அடுத்த வேலை என்ன?

அயராது வேலை செய்யும் ஓர் பலசாலியான ஆள் வேண்டும். அதே சமயம் சம்பளமும் கேட்கக் கூடாது, என்று எண்ணினார்.

அவர் நினைத்த மாதிரியே ஒரு ஆள் சொல்வதையெல்லாம் கேட்கக் கூடிய முட்டாளாக வேலைக்குச் சேர்ந்தான். அவன் பெயர் கருப்பன்.

கருப்பன் நிறைய வேலைகளை உடனுக்குடன் செய்து முடித்தான். மாணிக்கமே மனதிற்குள் பாராட்டிக் கொண்டார்.

அன்றைய வேலைகள், சமையல் உட்பட மதியமே முடிந்து விட்டது.

"ஐயா, அடுத்த வேலை என்ன?'' என்று கேட்டான் கருப்பன்.

"சாப்பிடற வேலை மட்டும்தான் பாக்கி. மற்ற வேலைகளை நீ விரைவாகச் செய்து முடித்து விட்டாயே!'' என்றார் மாணிக்கம்.

கருப்பன் தன்னடக்கத்துடன் நின்று கொண்டிருந்தான்.


"கருப்பா நான் போய் குளித்து விட்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு மாணிக்கம் குளியலறை நோக்கி நடந்தார்.

சிறிது நேரத்தில் குளித்துத் தயாராகி மேஜை முன் அமர்ந்து "கருப்பா சாப்பாடு எடுத்து வை, பசிக்கிறது'' என்றார் மாணிக்கம்.

"உங்களுடைய கட்டளைப்படி அந்த வேலையையும் செய்து முடித்து விட்டேனே'' என்றான் கருப்பன், காலி பாத்திரங்களைக் காட்டி.

மாணிக்கத்திற்கு தலையில் இடி விழுந்தது போலிருந்தது!

– பா. கவிதா, ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரைன் வேளாங்கன்னி பள்ளி,
தி.நகர், சென்னை.




• சாஞ்சி ஸ்தூபி

கட்டியவர்கள்

இங்கு புகழ் பெற்ற ஐந்து கட்டிடங்களின் புகைப் படங்கள் உள்ளன. போட்டி இதுதான். இவற்றை உருவாக்கியவர்களின் பெயர்களைக் கண்டு பிடித்து தபால் கார்டில் எழுதி முகவரிக் கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முழு முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி **31.12.98.** அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடைகளை எழுதினால் பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப் படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.


• ஜந்தர் மந்தர்





• பொற்கோவில்

• தாஜ்மஹால்



யார்?

– போட்டி

• தஞ்சை பெரிய கோயில்



ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 097

நீர்யானை தெரியுமா?



உலகிலேயே யானைக்கு அடுத்து இரண்டாவது எடை மிகுந்த நில வாழ் விலங்கு நீர் யானைதான்!

இவை ஆப்பிரிக்காவில் வாழ்கின்றன. ஆறுகளுக்கு அருகில் வசிக்கும் நீர் யானைகள் பெரும்பான்மையான நேரத்தை தண்ணீருக்குள்ளேயே செலவிடுகின்றன. 'ஆற்றுக் குதிரை' என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையிலிருந்தே 'Hippopotamus' என்ற பெயர் ஏற்பட்டது. நம் நாட்டில் யானையைப் போன்ற உருவத்தைக் கண்டு இதற்கு நீர்யானை என்று பெயர் உருவானது.

பீப்பாய் உருவம்

நீர்யானைகள் பெரிய பீப்பாய் போன்ற உடலையும் குட்டையான, குண்டான கால்களையும் பெற்றுள்ளன.

நீர்யானைக்கு பெரிய தலையும் மிகப் பெரிய வாயும் உள்ளது. ஆண் நீர் யானையின் பற்கள் ஐம்பது செ.மீ. நீளம் வரை வளரும்; மொத்தம் நாற்பது பற்கள். இப் பற்கள் கூர்மையான கத்திப் போன்று காணப்படும்.

ஆண் நீர் யானை 1.5 மீட்டர் உயரம் உடையது. இதன் எடை 4,500 கிலோ. சராசரி ஆயுட்காலம் நாற்பத்தி ஐந்து வருடங்கள்.

நாள் ஒன்றிற்கு பதினாறு மணி நேரம் தண்ணீரில் இருந்து தன் உடலைக் குளிர்ச்சியாகவும் வறண்டு விடாமலும் வைத்திருக்கும். சேற்றில் புரண்டு பூச்சி, வண்டுகளின் கடியிலிருந்து தப்பித்து விடுகின்றன நீர்யானைகள்.

நீச்சல் வீரர்


நன்கு நீந்தக்கூடியவை நீர்யானைகள். தமது கண்களையும் மூக்குத் துவாரங்களையும் மூடிக் கொண்டு ஐந்து நிமிடங்கள் வரை தண்ணீருக்கு அடியில் இவற்றால் இருக்க முடியும். ஆழம் இல்லாத இடங்களில் தண்ணீருக்குள் நடந்து செல்லும்.

இவற்றின் உடல் நீலம் கலந்த சாம்பல் நிறத்தில் காணப்படுவதால் தண்ணீரில் இருக்கும் போது எதிரிகளிடமிருந்து தப்ப முடிகிறது.

குட்டி

பெண் நீர்யானை வருடத்திற்கு ஒரு குட்டியை ஈன்றெடுக்கும். தண்ணீருக்குள் பிறக்கும் குட்டி சில நிமிடங்களில் நீந்தி மேலே வந்து சுவாசிக்கும். பிறகு மீண்டும்

தண்ணீருக்குள் சென்று தாயிடம் பாலைக் குடிக்கும். குட்டி பிறந்து எட்டு மாதங்கள் வரை தாய்ப்பாலைக் குடித்து வளரும்.



எதிரிகள்

முதிர்ச்சியடைந்த நீர்யானைகளுக்கு எதிரிகள் மிகச் சிலவே - மனிதனைத் தவிர்த்து. குட்டிகளுக்கோ சிங்கம், சிறுத்தை, முதலைகள் போன்ற எதிரிகள் உண்டு. இதனால் குட்டிகளைத் தாய் பாதுகாப்பாக தன்னுடனேயே வைத்துக் கொள்ளும். எப்போதாவது தனித்து விடுவதும் உண்டு.

பாதுகாப்பு அரண்

குட்டிகளுக்கு ஆபத்து ஏற்படும் போது தாய் பாதுகாப்பு அரண் போல முன்நின்று எதிர்க்கும். எனவே எதிரிகள் பின்னால் வந்தே தாக்குகின்றன.

'ஹிப்போஸ்' என்று செல்லமாக அழைக்கப்படும் இந்த நீர்யானைகளின் எடை அதிகமாக இருந்தாலும் மிகக் குறுகிய நேரத்தில் வேகமாக ஓடி எதிரிகளைத் தாக்கும் இயல்புடையவை.

தண்ணீரில் இருக்கும்போது அருகில் வரும் படகுகளைத் தாக்கிக் கவிழ்த்து விடக்கூடியவை நீர் யானைகள்.

இவை சூரிய வெப்பத்தால் தாக்கப்படும் போது சிவப்பு நிற திரவத்தை உடல் சுரக்கும். இத்திரவம் சுரக்காவிட்டால் தோல் மிகவும் வறண்டு போய் விடும்.



நீர்யானைகளின் வழித்தடம்

இவை இரவு நேரங்களில் உணவு தேடி வெளியே வருகின்றன. புல் மற்றும் தாவரங்கள் மட்டுமே உணவு. சூரியன் மறைந்த பின் உணவு தேடி நீண்ட தூரம் செல்லும் போது வழி

எஸ். சுஜாதா



தவறி விடாமல் இருக்க சாணத்தைப் போட்ட படியே செல்கின்றன.

நீர்யானை கொட்டாவி விடுமா?

ஆண் நீர் யானை சில வேளைகளில் தன் வசிப்பிடத்திற்கு வேறொரு ஆண் நீர் யானை வந்தால் தாக்கும்; அப்போது வாயைப் பெரிதாகத் திறந்து கொட்டாவி விடும். உண்மையில் இது கொட்டாவி இல்லை. எதிரியைத் தனது பெரிய கூர்மையான பற்களைக் காட்டி பயமுறுத்துவதே இதன் நோக்கம்.

* தினமும் இரவில் நாற்பது கிலோ உணவை உட்கொள்கின்றன. புல்லை தனது உதடுகளால் பறித்து உண்ணும். பற்களைப் பயன்படுத்துவதில்லை. விடிந்தவுடன் நீருக்குள் புகுந்து ஓய்வெடுக்க ஆரம்பித்து விடுகின்றன.

* குட்டி பிறந்த சில நிமிடங்களிலேயே நீந்த ஆரம்பித்து விடும். தாய், குட்டியை முதுகில் ஏற்றி நீரின் ஆழத்திற்கு அழைத்துச் செல்லும்.

❑ நீர்யானையின் கண்களும் மூக்கும் தலையின் உச்சியிலேயே அமைந்திருக்கின்றன. எனவே தண்ணீருக்குள் அமர்ந்து ஓய்வெடுக்கும் போது எளிதாக தலையை மேலே நீட்டிப் பார்க்கவும் சுவாசிக்கவும் முடிகிறது.

கோகுலம் க்விஸ்

1. நீர்யானைகள் எந்த நாட்டில் வாழ்கின்றன?
2. எத்தனை ஆண்டுகள் உயிர் வாழும்?
3. குட்டி எப்போது நீந்தும்?
4. எவ்வளவு நேரம் நீருக்கடியில் சுவாசிக்காமல் இருக்கும்?
5. உணவு என்ன?

விடை :
1. ஆப்பிரிக்கா
2. 45 வருடங்கள்
3. பிறந்த சில நிமிடங்களில்
4. 5 நிமிடங்கள்
5. புல், நீர்த் தாவரங்கள்



விலை மதிப்பற்றது...

பல வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த வசதியான மன்னன் ஒருவனுக்கு ஆயிரம் அடிமைகள் இருந்தனர். மன்னனுடைய அரண்மனை மிகப் பெரியது. அவன் கையைச் சொடுக்கினால் போதும், அடிமைகள் உடனடியாக அவனது தேவைகளை கவனித்தனர். பலருக்கும் மன்னனைப் பிடிக்கும். அடிமைகளை மிகவும் நல்ல விதத்தில் நடத்தியதால் அவனிடம் அன்புடன் இருந்தனர். அந்த ஆயிரம் அடிமை களில் குருபியான் மன்னனின் நம்பிக் கைக்கு மிகவும் பாத்திரமாக இருந்தான்.

அவன் எப்போதும் இரவும் பகலும் மன்னன் பக்கத்திலேயே இருப்பான். பல நல்ல பலசாலிகள், இருந்தும் மன்னன் இந்த குருபியான் அடிமையிடத்தில் மட்டும் தனியாக அன்பு செலுத்துவது மற்றவர்களுக்கு மிகவும் பொறாமையாக இருந்தது. மன்னன் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. தன்னை யார் பார்க்க வந்தாலும் பார்த்தால் நடுங்கும் உருவம் உடைய அந்த அடிமையைக் கூடவே வைத்திருந்தான்.

அரண்மனை சபா மண்டபத்தில் பலரும் இந்த விஷயத்தைப் பற்றிப் பேசுவதைப் பொறுக்க முடியாத, மன்னன் தனக்கு அந்த அடிமையிடம் தனி அன்பு ஏற்பட காரணமான சம்பவத்தைக் கூறலானான்:

“**ப**ல வருடங்களுக்கு முன் மாலை வேளை ஒன்றில் பக்கத்து நாட்டு மன்னனைப் பார்த்துப் பேசிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தேன். என் பின்னால் பல ஒட்டகங்கள் நகை மூட்டைகளைச் சுமந்து வந்து கொண்டு இருந்தன. திடீரென்று ஒட்டகங்கள் வழுக்கி விழுந்ததால் அதன் முதுகிலிருந்த நகை மூட்டைகள் அவிழ்ந்து நகைகள் கீழே தெறித்தன. அதைப் பார்த்த பல அடிமைகள் என்னை விட்டு விட்டு நகைகளைப் பொறுக்குவதில் ஈடுபட்டனர். ஆனால் குருபியான் மட்டும் என் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தான். “நீ நகைகளை எடுக்கவில்லையா? பணக்காரன் ஆக வேண்டும் என்ற எண்ணம் இல்லையா?” என்று நான் அவனைக் கேட்டேன். அவன் “மன்னா! நீங்கள்தான் எனக்கு விலைமதிக்க முடியாத சொத்து. அதை விட வேறு எனக்கு என்ன வேண்டும்?” என்றான். “அப்படி அவன் பேசியதைக் கேட்டதிலிருந்து அவன் என் நம்பிக் கைக்குப் பாத்திரமானவன் ஆனான்” என்று மன்னன் விளக்கினான்!

மக்கள் பலரும் ‘அந்த அடிமை மீது உங்கள் அன்பு நியாயமானது. அந்தத் தகுதி அவனுக்குக் கட்டாயம் இருக்கிறது. நாங்கள் உங்களை தவறாக எடைபோட்டு விட்டோம். மன்னித்து விடுங்கள்’ என்றனர்.

– இந்திரா, ஓசூர்.



திருச்செந்தூர் செந்திலாண்டவர் ஆலயம். டச்சுக்காரர்கள் கொள்ளையிட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆறுமுகப் பெருமானின் அழகு அவர்களுக்கு விட்டு வைக்க மனம் வரவில்லை. அதையும் எடுத்துக் கொண்டனர்.

புயலும், மழையும், வெட்டி வீசும் மின்னலும், காது செவிடுபடும் இடியும் அனைவரையும் கலங்க வைத்தது. கப்பல் எந்த நேரமும் கவிழ்ந்து விடலாம் என்ற நிலைமை.

தலைவன் கத்தினான்.

“அந்தப் பித்தளை விக்கிரகங்களைத் தூக்கிக் கடலில் எறி. பாரம் குறையும்” என்று.


திருநள்ளாறில் கொள்ளையிட்ட நடராஜரைத் தூக்கி வீசினார்கள். அப்போதும் மழை நிற்கவில்லை. கப்பலின் ஆட்டமும் குறையவில்லை!

ஆறுமுகப் பெருமானின் விக்கிரகத்தையும் எடுத்து எறிந்தவுடன் படிப்படியாக மழை, புயல், கப்பலின் ஆட்டம் எல்லாம் நின்றது (1648). பிரான்ஸ் நாட்டுப் புலவர் எம். ரென்னால் 1785-ல் ஒரு டச்சு மாலுமி மூலம் இதைத் தெரிந்து கொண்டதாக எழுதி வைத்திருக்கிறார்.

ஆலயத்தில் விக்கிரகம் இல்லாததால் பக்தர்கள் மனம் வருந்தி, நெல்லையில் புலவர் பெருமானாக, வள்ளலாக, அரசு அலுவலராக வாழ்ந்த வடமலையப்பப் பிள்ளையிடம் சென்று முறையிட்டனர்.

மூலஸ்தானத்திலுள்ள சுப்ரமண்ய ஸ்வாமியின் கற்பிரதிமம் உடைக்கப்பட்டதைக் கேட்டு மனம் உருகி அழுதார்.

வடமலையப்பப் பிள்ளையின் தாயாரை எல்லோரும் ‘ஆச்சி’




என்றழைப்பது வழக்கம். அவர்கள் தினமும் தாமிரபரணியில் நீராடி விட்டு, நடுவில் ஒரு பாறையில் சிவ பூஜை செய்வார்கள்.

அந்தப் பாறையைக் கற்சிலை செய்ய எடுத்துக் கொள்ளும்படி 'ஆச்சி' கூறினார். தாய் சொல் தட்டாத தனயர் பிள்ளை அதன்படியே ஆணையிட்டார். மூலஸ்தான சிலை

ஆர். பொன்னம்மாள்

செய்ததும், மிச்சமுள்ள பாறையில் மேலும் ஒரு முருகன் சிலை வடித்தான் சிற்பி (அது குறுக்குத்துறை சுப்பிரமணிய ஸ்வாமி). செம்பினால் ஆறுமுகப் பிரதிமமும் செய்தாயிற்று.

இரு உருவங்களையும் அலங்கரித்து மேள தாளத்தோடு ஊர்வலமாகப் புறப்பட்டனர். இரவு பாளையங் கோட்டையில் தங்கினார். கனவில்,



"அன்பா! செந்தூரரை விட்டுப் போக மனமில்லாமல் வதனாரம்பத் தீர்த்தக் கட்டத்தில், கிழக்கு வாசலுக்கு நேரே உள்ள பாறையில் நான் கிடக்கிறேன். என்னை எப்போது மீட்பாய்?" என்று கேட்கிறார் முருகன்.

கனவிலும் கண்ணீர்

சொரிந்த பிள்ளை, "அப்பனே! நீங்கள் இருக்குமிடம் தெரியாமல் தானே இன்னொன்று செய்தேன்! அடையாளத்தைக் கொஞ்சம் விரிவாகச் சொல்லுங்கள்" என்று கெஞ்சினார்.

"என்னைச் சுற்றி எலுமிச்சம் பழ மாலையொன்று மிதக்கும். மேலே என் மாமனின் வாகனம் இரண்டு பறக்கும். தக்கப்பனில்லாத பிள்ளை உண்டா? முதலில் என் தந்தையே உனது கைக்குக் கிடைப்பார். தளராமல் தேடு" என்றார்.

கனவு கலைந்தது. எழுந்த பிள்ளை அனைவரிடமும் தன் கனவைக் கூறினார். என்னவொரு நம்பிக்கை கொண்டிருந்தால் செப்புச் சிலையை அங்கேயே வைத்துவிட்டு மூலஸ்தானச் சிலையோடு செந்தூருக்குப் போவார்!

முருகன் கனவில் குறிப்பிட்ட இடத்தில் எலுமிச்சம்பழ மாலை வளையமாகி நின்றதை அனைவரும் கண்டனர். ஆகாயத்தைப் பார்த்தால் இடதும் வலதுமாக இரு கருடன்கள் அங்கே வட்டமிட்டன.

ஓடக்காரர்கள் கடலில் இறங்கித் தேடினர். எந்தச் சிலையும் அகப்படவில்லை. உணர்ச்சி வசப்பட்ட பிள்ளை கடலில் குதித்து முக்குளித்தார்.

அவர் கையில் அகப்பட்ட விக்கிரகத்தோடு வெளிப்பட்டால் அது 'திருநள்ளாற்று நடராஜர்!' அதைப் படகில் வைத்து விட்டு மீண்டும் மூழ்க இம்முறை ஆறுமுகப் பெருமானின் விக்கிரகம் அவர் கையில் கிடைத்தது. அவர் ஸ்பரிசம் படக்காத்திருக்கும் சண்முகர் ஓடக்காரர்கள் கையில் அகப்படுவாரா?


முருகனை பிள்ளை வெளிக் கொணர்ந்த நாள் தைமாதம், புனர்பூசம். நடராஜ விக்கிரகத்தில் திருநள்ளாறு நடராஜர் என்று பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம். கி.பி. 1653 (தை 29ம் நாள்) கும்பாபிஷேகம் நடந்தது.

மண்ணாங்கட்டி ஒரு ஏழை விவசாயி. அவருக்கு ஞாபக மறதி அதிகம். ஒருநாள் அவர் சென்னைக்குப் புறப்பட டிக்கெட் வாங்கிக் கொண்டு ரயிலில் ஏறி அமர்ந்தார். சிறிது நேரத்தில் டிக்கெட் பரிசோதகர் வந்தார். மண்ணாங்கட்டியிடம் வந்து, "உனது டிக்கெட்டைக் காட்டு" என்றார் அவர்.

"நான் என்னோட டிக்கெட்டை எங்கே வச்சேன்னு தெரியலீங்க" என்றார் மண்ணாங்கட்டி.

"சரி, நீ எங்கே போற?" என்றார் பரிசோதகர்.

"அதையும் மறந்துட்டேங்க" என்றார் மண்ணாங்கட்டி.



"எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டார் பரிசோதகர்.

"அதையும் மறந்துட்டேங்க."

"சரி நானாவது யார் என்று தெரிகிறதா?"

"நீங்க சுண்டல் விக்கறவங்க" என்றார் மண்ணாங்கட்டி.

பரிசோதகர் தலையில் அடித்துக் கொண்டு சென்று விட்டார்.

நா.பா. குகன்,
எட்டாம் வகுப்பு,
அ.மே.நி. பள்ளி,
பெரிதச்சூர்.



உன் வீட்டிற்கு வர மாட்டான்!

அருண், ஆனந்த் இருவரும் நண்பர்கள். ஒரே வகுப்பில் படித்து வந்தனர். அவர்களுள் அருணுடைய அப்பா ஏழை. ஆனந்தனுடைய அப்பாவோ பணக்காரர். இருப்பினும் அவர்களுக்குள் நல்ல நட்பு நிலவியது. அருண் மிதி வண்டியிலும், ஆனந்த் காரிலும் தினமும் பள்ளிக்கு வருவார்கள்.

அவர்கள் இருவரும் படிப்பு, விளையாட்டு, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி என எல்லாவற்றிலும் பங்கு பெற்று வென்று விடுவார்கள். அவர்களுக்குள் போட்டி, பொறாமை எதிலும் இருக்காது.

அவர்கள் வகுப்பில் குமார் என்ற மாணவன் புதிதாக வந்து சேர்ந்தான். இவர்கள் நட்பைப் பார்த்த குமார் எப்படியாவது அருணை ஆனந்திடமிருந்து பிரித்து தான் ஆனந்திடம் நண்பனாக வேண்டும் என முடிவு செய்தான். அதன் படியே அருணை சிறிது சிறிதாக ஆனந்திடமிருந்து விலக்கி நண்பனான்.

அருணுக்குப் பிறந்த நாள் வந்தது. மாலை தன் வீட்டிற்கு வருமாறு அருண் தன் நண்பன் ஆனந்தைக் கேட்டுக் கொண்டான். ஆனந்தும் வருவதாக ஒப்புக் கொண்டான். மாலையில் ஆனந்தின் வீட்டிற்கு குமார் வந்தான். ஆனந்த், அருணுக்கு வாங்கி வைத்திருந்த பரிசை எடுத்துக் கொண்டு புறப்படத் தயாரானபோது அவனின் அப்பா ஏதோ முக்கியமான காரணத்தைச் சொல்லி அவனை வெளியூர் செல்ல அழைத்தார். ஆனந்த், குமாரிடம் "நீ பரிசை என் சார்பில் கொடுத்து விடு" என்று கூறி விட்டு ஊருக்குப் புறப்பட்டான். ஆனந்திடமிருந்து அருணைப் பிரிக்க ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்ததாக எண்ணினான் குமார்.

அருண் வீட்டிற்குச் சென்றதும் குமார் அருணிடம் "நீ ஏழை என்பதால் ஆனந்த் உன் வீட்டிற்கு வர மாட்டானாம். அதனால் இந்தப் பரிசை என்னை விட்டுக் கொடுக்கச் சொன்னான்" என்று அவன் மனம் புண்படும்படி கூறினான். அருணும் அதை நம்பி ஆனந்த் மீது வருத்தம் கொண்டான். ஆனந்திடமிருந்து தன்னை விலக்கிக் கொள்ள முடிவு செய்தான். அதை அறியாத ஆனந்த் தொடர்ந்து நண்பனாகவே இருந்தான்.

ஒருநாள் குமார் ஆனந்தின் வீட்டிற்கு வந்தான். அன்று பல பள்ளிகள் பங்கு பெறும் முக்கியமான பேச்சுப்போட்டி. அதற்கு ஆனந்த் தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தான். பின்னர் குமாரும் ஆனந்தும் பள்ளிக்கு காரில் சென்றனர். செல்லும் வழியில் ஆனந்த் காரில் செல்வதைப் பார்த்தான் அருண். அருணும் அந்தப் போட்டியில் இருந்தான். ஆனந்த் அவனிடம் பேசத் துடித்தான். அருண் அவனைப் பார்த்தும் பார்க்காதது போலச் சென்றான். அவ்வாறு மிதி வண்டியில் சென்று கொண்டிருக்கும்போது திடீரென நிலை தடுமாறி வேகமாக வந்த வேறொரு காரில் மோதி கீழே விழுந்தான் அருண். அதனால் அவனுக்குக் காலில் பலத்த காயம் ஏற்பட்டது. எழுந்து நிற்கக் கூட முடியவில்லை.

உடனே குமார், ஆனந்திடம் "இவன் ஒருவன்தான் நமக்கு முக்கியமான போட்டி. இவனை விட்டுச் சென்றால் முதல் பரிசு நமக்குத்தான்" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான். அப்போதுதான் ஆனந்திற்கு குமாரின் வஞ்சக எண்ணம் புரிந்தது. போட்டிக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் சற்றும் இல்லாமல் அருணைக் காப்பாற்ற ஓடினான் ஆனந்த்.

அருணை மருத்துவமனையில் சேர்த்துத் தானே நேரில் சென்று அருணின் பெற்றோரை அழைத்து வந்தான். அருண் குணமாகும்வரை ஒவ்வொரு நாளும் தன் காரிலேயே அருண் வீட்டிற்குச் சென்று அவனைப் பள்ளிக்கு அழைத்து வந்தான்.

அப்போதுதான் அருண் ஆனந்தின் நல்ல குணத்தையும் தான் அவனைத் தவறாகப் புரிந்து கொண்டதையும் நினைத்து வெளிப்படையாகவே மன்னிப்புக் கேட்டான். அருணைக் கட்டிப் பிடித்துக் கொண்ட ஆனந்த் "எப்போதும், யார் பொருட்டும் நம் அன்பு மாறாது" என்று கண்ணீர் மல்கக் கூறினான்.

– பா. ஆனந்த குமார்,
எட்டாம் வகுப்பு,
எஸ்.எம்.பீ.எம். பள்ளி,
திண்டுக்கல்

வால்! வால்!

உலகில் பல்வேறு வகையான பிராணிகள் வாழ்கின்றன. ஒவ்வொரு பிராணியும் வால்களை வித விதமாகப் பயன்படுத்தி வருகின்றன.

மனிதர்களாகிய நமக்கும் முன்னொரு காலத்தில் வால் இருந்தது என்றால் நம்பு




வீர்களா? மனிதர்கள் வாலைப் பயன்படுத்தாமையால் நாளுக்கு நாள் வாலின் அளவு குறைந்து காணாமல் போய்விட்டது!

மயில், கிளி, ஆஸ்ட்ரிச் உட்பட எல்லா பறவை



களுக்கும் வால் உண்டு. இவை பறப்பதற்கும், திசை திரும்புவதற்கும் வால் உதவுகிறது. ஆண் பறவைகள் தங்கள் அழகிய வாலால் பெண் பறவைகளைக் கவர்கின்றன.

மாட்டிற்கு நீண்ட வால் உண்டு. இவ்வாலால் ஈ, கொசு போன்ற



பூச்சிகளை விரட்டி விடும்.



மீன்கள் மற்றும் திமிங்கலங்கள் வால்களை நீந்தி நகர்வதற்கும், திசை திரும்புவதற்கும் பயன்படுத்துகின்றன.

நாய்களின் இனத்திற்கேற்ப வால்களின் அளவு வேறுபடும்.



மகிழ்ச்சியாக இருக்கும் போது நாயின் வால் சுறுசுறுப்பாக வேலை செய்யும். நாய்கள் பயப்படும் போது இரண்டு கால்களுக்கு இடையே வாலைச் சுருட்டிக் கொள்ளும்.



குரங்குகளுக்கும் நீண்ட வால் உண்டு. இவ்வால் மூன்றாவது கை போன்று செயல் படுகிறது. கிளைக்கு கிளை தாவும் போது உடலை சமநிலைப்படுத்த வால் உதவு கிறது.



அணில் தன் உருவத்தை விடப் பெரிய வாலைக் கொண்டுள்ளது. அணிலின் வேகமான ஓட்டம், தாவுதல் போன்ற செயல்களுக்கு வால் உதவுகிறது. குளிர் காலங்களில் உடலைச் சுற்றி வாலைப் போர்த்திக் கொள்ளும்.

கங்காருவின் வால் தடித்தும் உறுதியாகவும் இருக்கும்.




கங்காரு குதித்துச் செல்லும் போது உடலை சமநிலைப்படுத்தவும் ஓய்வாக இருக்கும் போது உட்கார்ந்து கொள்ளவும் வால் பயன் படுகிறது.



பல்லிகள், பச்சோந்திகளுக்கும் பெரிய வால் உண்டு. பல்லிகள் எதிரிகளிடம் சண்டையிடும் போது வால் அறுந்து விட்டால் மீண்டும் வால் முளைத்து விடும்.

முதலைகள் நீந்தவும் உணவைத் தேடிப் பிடிக்கவும் வாலைப் பயன்படுத்துகின்றன.







தேள்கள் தங்கள் வாலால் எதிரிகளைத் தாக்கி, உணவாக்கிக் கொள்கின்றன.

பீவர்கள் தங்களின் சிறிய தட்டையான வாலை மண் எடுத்து அணை கட்டவும், நீந்தவும் பயன் படுத்திக் கொள்கின்றன.



நாய்க்குட்டி

பள்ளிக் கூடம் விட்டவுடன்
பறந்து வந்தேன் வீதியிலே
தாயைப் பிரிந்து தவிக்கின்ற
நாயின் குட்டி கண்டேனே!

கறுப்பின் அழகு நாய்க்குட்டி
காலைச் சுற்றும் நாய்க்குட்டி
வியப்பால் மகிழ்ந்து விளையாட்டாய்
வீட்டுக் கழைத்துச் சென்றேனே!

அம்மா அப்பா இதைக்கண்டு
இம்சை வேண்டாம் என்றாலும்
சும்மா வளர்ப்பேன் எனச் சொல்லி
சொகுசாய் வளர்த்தேன் அடம்பிடித்து!

ஒருநாள் காலை மலர்ந்தவுடன்
தெருவில் ஏதோ குரல் கேட்டு
குதித்துப் பாய்ந்தது நாய்க்குட்டி
கொஞ்சித் திரிந்தது தாயோடு!

— கருமலைப்பழம் நீ



உங்கள் நூலகம்

தூண்டா விளக்கு. மதிஒளி, பக். 56 ரூ. 18/- கங்கை புத்தக நிலையம், சென்னை – 17.

தனது படைப்பாற்றல் மூலம் ஏற்கெனவே கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமாகியுள்ள ஆசிரியையின் வெல்லக் கட்டிப் பாடல்களின் அருமையான வண்ணத் தொகுப்பு இது. மொத்தம் 27 பாடல்கள். எளிய நடை. சந்தம் சிதைக்காத சொற்கள். மாறுபட்ட கற்பனை. தங்கள் வீட்டுக் கிணற்றைப் பற்றி இதுவரை அதிகமாக யாருமே சிறுவர்களுக்காகப் பாடவில்லை. ஆசிரியை இதோ தங்கள் வீட்டுக் கிணற்றை, அதன் பெருமையை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். படியுங்கள்.

ஆழமே கிணறும் ஆனால்
அருகிலே முகத்தைக் காட்டும்
தாழவே வாளி விட்டுத்
தண்ணீர் எடுக்க வேண்டும்.

ஊற்றினில் ஊர்ந்து வந்து
ஊட்டிடும் கிணற்று நீரும்
சீற்றமாய்ப் பொங்கிடாது
சிறகிலாக் கிணற்று நீரும்

ஆழமே கிணறும் ஆனால் அருகிலே முகத்தைக் காட்டும்!

கிணற்றின் தன்மை எத்தனை அழகாக எளிமையாக கற்பனை வளத்தோடு அறிமுகமாகிறது! பத்மவாசனின் ஓவியங்கள் பாடல்களைப் பேச வைக்கின்றன. மத்திய அரசினரின் என்.சி.இ.ஆர்.டி. பரிசை இந்நூல் பெற்றதில் எந்த வியப்பும் இல்லை.

இமயமலையின் வரலாறும் முழு விவரங்களும், சேனா சரவணன், பக். 136, ரூ.26/- மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை – 600 017.

இமயமலையைப் பற்றி எத்தனையோ புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றிலும் பல சிறப்புகள் இருக்கும். அத்தனை சிறப்புகளையும் தாங்கி வெளிவந்துள்ள தமிழ் நூல் இது. புவியியல், வரலாறு, ஆன்மீகம், அறிவியல், சாகசம் ஆகிய எல்லாத் தகவல்களும் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. இந்தத் தகவல்கள் பல ஆச்சர்யப்பட வைக்கின்றன. உதாரணம் – எவரெஸ்ட் சிகரத்தின் புராதனப் பெயர் 'கௌரிசிகார்'. மலையேறுபவர்கள் 'பனிக்குருடு' நோய்க்கு இலக்காக நேரும். அதனால் பனிக் கண்ணாடி அணிந்து செல்வது அவசியம்.

இப்படி எத்தனையோ புதுமையான பயனுள்ள தகவல்களைப் படிப்பவர்களுக்கும் மலையேற்றத்தில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் இந்த நூல் தருகிறது. பயன் தரும் நூல்.

⊕


பழங்குடிகளும் பழக்க வழக்கங்களும் பாகம் – 2, கே. எஸ். சுப்ரமணி, பக். 200, ரூ. 38/- மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் சாலை, சென்னை – 17.


சென்னை, பெங்களூர், பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற நகரங்களில் உள்ள நாகரீகமான மக்களின் வாழ்க்கையைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால் எத்தனை பேருக்கு உதகைக்கு அருகே அடர்ந்த நீலகிரி மலைச் சிகரங்களுக்கு இடையே மக்கள் அதிகமாக நடமாடாத, நவீன நாகரீக வசதிகள் எதுவுமே இல்லாத பழங்குடி மக்களான கசவர்களைப் பற்றித் தெரியும்? இவர்களைப் போல் இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் அடர்ந்த மலைகளுக்கு இடையே இயற்கையோடு ஒன்றி வாழும் விதம்விதமான மலைவாழ் மக்களைப் பற்றித் தெரியும்? இந்தக் குறையை இந்த நூல் போக்குகிறது. இந்தியாவில் மட்டுமல்லாது உலகத்தின் பல நாடுகளிலும் இயற்கையோடு ஒன்றி விநோதமான பழக்க வழக்கங்களோடு வாழும் பழங்குடி மக்களை இந்த நூல் அறிமுகப்படுத்துகிறது. விரிவான முறையில் இல்லை என்றாலும், எவை அவசியமோ அவற்றை கூறி அவர்கள் எந்தவிதங்களில் மாறுபட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் இது கூறுகிறது. சிறுவர்களுக்கு மட்டுமல்ல பெரியவர்களுக்கும் படிக்க சுவாரஸ்யமான நூல். இதைப் பழங்குடி மக்கள் கையடக்க தகவல் களஞ்சியம் என்று அழைப்பது கூடப் பொருத்தமாக இருக்கும்!


— ரே

வண்டியில் பயணம்

கதை : நிஷார்
படம் : சசி




இந்த ஏழையிடம் இருக்கப் பிடிக்கலை. பணக்காரரிடம்தான் வாழ ஆசைப்படறேன்.
உன்னை பணக்காரரிடம் விற்றால்தான் உண்டு.
என்னை விற்கணும்னா நான் என்ன செய்யணும்?
நீ வம்பை விலைக்கு வாங்கறே!
நான் கண்டிப்பா இங்கிருந்து போகணும்.
அன்பான எஜமான், எங்களை எல்லாம் விட்டுப் போறியா?
நான் எந்த விதத்திலும் உதவ மாட்டேன்.
ராஜா வருத்தத்துடன் இருந்தது.
என்ன ராக்கம்மா! ராஜா இளச்சிட்டே வருது.
ஆமாம்! முன்னாடி மாதிரி சுறுசுறுப்பே இல்லை.
வைத்தியரிடம் காட்டலாமா?
போன வாரமே காட்டிட்டேன். நோய் எதுவும் இல்லையாம்!
அப்ப, சீக்கிரம் வித்துடலாமே!
நானும் அந்த முடிவுக்கு வந்துட்டேன்.
முருகையன் பேசுவதைக் கேட்ட ராஜாவுக்கு ஒரே சந்தோஷம்!
அம்மா என்னை விற்கப் போறாங்க!
நீ பின்னாடி வருத்தப்படுவே.


நான் ஒரு நாளும் வருத்தப்பட மாட்டேன்.
மறு நாள் சந்தைக்கு ராஜாவை அழைத்துச் சென்றார் முருகையன்.
பெரிய கசாப்புக்கடைக்காரன் ராஜாவையும் இன்னும் சில ஆடுகளையும் வாங்கி லாரியில் ஏற்றினான்.
ஜானியாவது மாட்டு வண்டியிலேதான் சவாரி செஞ்சான். நான் லாரியிலேயே போறேனே! ஜாலிதான்.
போகும் வழியில் –
உனக்கு பயமில்லையா?
ஏன் பயப்படணும்?
நம்மை வாங்கியிருப்பவர் கசாப்புக் கடைக்காரர்.
ஐயோ! நான் என்ன செய்வேன்?

இதுவரை:

ஓமப்பொடி பிரியனான மாதவனுக்காக, நண்பன் சேது தன் வீட்டில் அம்மா செய்த ஓமப் பொடியைப் பொட்டலமாகக் கட்டி எடுத்து வந்து, பள்ளியில் மின்சார மீட்டர் பெட்டி மேல் வைத்து விட்டான். மாதுவுக்குத் தகவல் தர, மாது அதை எடுக்க வந்தான். அவன் கை பட்டு மின் இணைப்பு ஏற்பட, பம்ப் ஓட, மின் விளக்குகள் எரிய, பஸ்ஸர் ஒலிக்க, மாது பயந்து ஓடிவிட்டான், ஓமப் பொடிப் பொட்டலம் பிரிந்து மீட்டர் பெட்டியிலேயே கிடந்தது. அது தனது ரஃப் நோட்டுத் தான் என்பதால், தன்னைக் காட்டிக் கொடுத்து விடும் என்று சேது பயப்பட்டான். மாது அதை எடுத்துச் செல்ல மறுபடியும் மீட்டர் பெட்டிக்கு வந்தான். அங்கே தலைமை ஆசிரியர், கையில் அதே பிரிந்த ஓமப் பொடிப் பொட்டலத்துடன் அனல் பறக்க அவனை வரவேற்றார்!


மின்கல மாதவன்!

2. பாட்டி அடைந்த பீதி!

தலைமையாசிரியர் மாதவனை அனல் கக்கப் பார்த்தார்.

அவர் நடத்தப் போகும் விசாரணையில் எத்தனை குற்றங்கள் வெளியாகப் போகிறதோ என்று நடுங்கி நின்றான் மாது. தான் அகப்பட்டுக் கொண்டதோடு, சேதுவும் தன்னால் அகப்பட்டுத் தண்டனை அடையப் போகிறான் என்ற நினைப்புதான் அவனை மிகவும் கலங்க வைத்தது. சேதுவுக்குத் தண்டனை கிடைத்தால், அடிக்கடி ஓமப் பொடி கிடைக்கும் அரிய வாய்ப்பும் அல்லவா பறி போய் விடும்! எத்தனை பெரிய இழப்பு! 'ஆண்டவனே, எனக்கு தண்டனை கிடைத்தால் பாவாயில்லை. சேது சிக்கிக் கொள்ளக் கூடாது' என்று மனதுக்குள் வேண்டிக் கொண்டான் மாது. அவன் வேண்டுகோளுக்கு

ரேவதி





"ஏன் உன் பையனை திட்டறே?"

"பிடரியை 'ஸ்டெப் கட்டிங்' பண்ணிட்டு வந்திருக்கான்!"

— காவேரிப்பட்டணம் சோமசேகர்

ஆண்டவன் இறங்கி விட்டதைப் போலவே எல்லாம் நடந்தன!

"பள்ளிக்கு ஓமப் பொடி எடுத்து வந்தது, மீட்டர் பெட்டியை அதை ஒளித்து வைக்கும் இடமாகப் பயன் படுத்திக் கொண்டது, என்னவோ பொய் சொல்லி விட்டு அதைத் திங்க திருட்டுத் தனமாக வந்தது....! ம்... அடுக்கடுக்கா எத்தனை தப்புப் பண்ணியிருக்கே?" என்று கர்ஜித்த தலைமை ஆசிரியர், "உன் பெயர் என்ன? எந்த வகுப்பு? என்ன பிரிவு?" என்று கேட்டார்.

விசாரணை வேறு திசையில் திரும்பி விட்டதை உணர்ந்து கொண்ட மாது ஒரு நிம்மதி பெருமூச்சு விட்டான். ஓமப் பொடி வரவுக்குப் பாதிப்பு இருக்காது என்ற நினைப்பு மகிழ வைத்தது. தன்னையும் மீறி மாது புன்னகைத்துக் கொண்டான்.

"கேட்டுக்கிட்டே இருக்கேன், பதில் சொல்லாமல் சிரிச்சுக்கிட்டே இருக்கியே!" என்று வெகுண்ட தலைமை ஆசிரியர், அவன் காதைத் திருக வந்தார்.

காது திருகும் தண்டனைக்குப் பெயர் பெற்ற தலைமை ஆசிரியரின் கைகளில் சிக்கிக் கொண்டால் காது அவ்வளவுதான் என்ற பயத்தில், தண்டனையைத் தவிர்க்க முயன்ற மாது "சார், சார் இனிமேல் இப்படிப் பண்ண மாட்டேன். மன்னிச்சுடுங்க சார்" என்று குமுறியபடி, கைகளை நீட்டிக் கெஞ்சியபடி தடுத்துக் கொண்டே பின்னால் நகர்ந்தான். தலைமை ஆசிரியர் விடவில்லை. காதைப் பிடிக்கக் கையை நீட்டிக் கொண்டே வந்தார். மாதவன் கெஞ்சியபடி பின்னே நகர்ந்தான். தட்டுத் தடுமாறி அப்படியே மின்மீட்டர் பெட்டி மேல் சாய்ந்தான். விழுந்து விடாமல் இருக்க இரு கைகளாலும் பிடித்துக் கொண்டான்.

அவ்வளவுதான். இணைப்பில் கை பட்டு மின் இணைப்பு ஏற்பட்டு, பெரிய சத்தத்துடன் தண்ணீர் மோட்டார் இயங்க ஆரம்பித்தது! விளக்குகள் எரிந்தன. மின்விசிறிகள் சுழல ஆரம்பித்தன!

மின்சாரம் இல்லாமல் சலித்துப் போயிருந்த தலைமை ஆசிரியர், மின்சாரம் வந்து விட்ட உற்சாகத்தில், "இதுதான் முதல் எச்சரிக்கை, கடைசி எச்சரிக்கையும் இதுதான். இனி இந்த மாதிரி செய்யாதே" என்று கூறி விட்டுத் திரும்பினார்.

"சார் சார்! ஓமப் பொடிப் பொட்டலம் சார்!" என்று கெஞ்சியபடி கையை நீட்டினான் மாது. அவனுடைய குழைவு தலைமை ஆசிரியருக்குச் சிரிப்பை வரவழைத்தது. "இந்தா" என்று பொட்டலத்தை அவனிடம் தந்து விட்டு விரைந்தார்.

மாது ஓமப் பொடிப் பொட்டலத்துக்காகக் கையை நீட்டியபோதே மின் இணைப்பு மறுபடி துண்டிக்கப்பட்டு எல்லாம் பழைய நிலைக்கு வந்து விட்டது. இருப்பினும், இன்னும் இரண்டொரு நிமிடங்களில் மின்சாரம் வந்து விடும் என்ற நம்பிக்கையில் தலைமை ஆசிரியர் தன்னுடைய அறைக்கு விரைந்தார். ஆனால் அரை மணிக்கு மேலாகியும் மின்சாரம் வராததால் பொறுமை இழந்து மின்சார அலுவலகத்தோடு தொடர்பு கொண்டார்.

"என்னது! மின்சாரம் வந்த வேகத்தில் மறுபடி போய் விட்டது! இரண்டு முறை இப்படியாச்சே? எப்பத்தான் வரும்?" என்று கேட்டார்.

"டிரான்ஸ்பார்மர் கம்பம் மீது லாரி மோதி சாய்ந்து விட்டது. ஒரு மணி நேரமா மின்சாரம் கிடையாது. பெரிய ரிப்பேர். ஆட்கள் சரி பண்ணிக் கொண்டிருக்காங்க. மூன்று மணிக்கு மேல்தான் சரி

யாகும். அதுக்கு அப்புறம்தான் மின்சாரம் வரும்" என்று பதில் கிடைத்தது.

"அரை மணிக்குள் இரண்டு முறை சில நொடிகள் மின்சாரம் வந்ததே!"

""முழு சர்க்யூட்டும் குனோஸ் சார். இரண்டு மணி நேரமா எதுவுமே இல்லை. உங்களுக்கு மட்டும் எப்படி மின்சாரம் இரண்டு முறை, அதுவும் சில நொடிகள் வந்திருக்க முடியும்? என்னமாவது கனவு கினவு கண்டீங்களா?" என்ற பதில் வந்தது.

தலைமை ஆசிரியருக்கு ஒரே குழப்பமாக இருந்தது. இரண்டு முறை சில நொடிகள் தண்ணீர் மோட்டார் ஓடியதும், விளக்குகள் எரிந்ததும், மின் விசிறிகள் சுற்றியதும், பஸ்ஸர் ஒலித்து வகுப்புகள் முடிந்து புதிய வகுப்புகள் தொடங்கியதும் பொய்யா? மின் வாரிய அதிகாரி இப்படிச் சாதிக்கிறாரே!

இடைவேளை வந்தது. தலைமை ஆசிரியர் மற்ற ஆசிரியர்களிடம் கேட்டார். அவர்களும் இரண்டு முறை சில நொடிகள் மின்சாரம் வந்து போனதை உறுதிப் படுத்தினார். அவர் குழம்பிப் போனார்.

நண்பன் சிக்கிக் கொள்ளவில்லை. ஓமப் பொடி தடங்கல் இல்லாமல் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியோடு மாது வீடு திரும்பிக் கொண்டிருந்தான்.

வழியில் ஒரு பிள்ளையார் கோவில். ஒரு பாட்டி கோவில் படியில் கற்பூரத்தை வைத்து ஏற்ற முயன்று கொண்டிருந்தார். காற்று பலமாக வீசியதால் தீக்குச்சி அணைந்து கொண்டே இருந்தது. கற்பூரத்தை ஏற்ற முடியவில்லை. என்ன





''தேங்காய்' வியாபாரியைப் பேட்டி கண்டீங்களாமே...!''

''ஆமாம்! 'துருவித் துருவி'க் கேள்வி கேட்டேன்...!''

— பாண்டமங்கலம் ஜி. குமரேசன்

பண்ணலாம் என்று யோசித்த பாட்டி மாதுவைப் பார்த்தார்.

"தம்பி இங்கே வாப்பா. இந்தக் கற்பூரத்தைக் கொஞ்சம் ஏற்றி வையேன்?" என்று பாட்டி அழைத்தார்.

"பாட்டி, இங்கே காற்று ரொம்ப அடிக்கிறது. கொஞ்சம் தள்ளி வைச்சு ஏத்துங்க" என்று புத்தகப் பையைக் கீழே வைத்த மாது, இரு கைகளாலும் கற்பூரத்தை எடுத்து நகர்த்தினான். பாட்டி தீப்பெட்டியைத் தருவதற்கு முன்பு, கற்பூரம் எரியத் தொடங்கியது. மாதுவுக்கும் அது திகைப்பாகத்தான் இருந்தது. பாட்டி பீதியுடன் அவனைப் பார்த்தபடி அவசரம் அவசரமாக வேண்டிக் கொண்டு, வேகமாக வெளியேறினார்.

கற்பூரம் எரிந்ததைப் பற்றி சிந்தித்துக் கொண்டே மாது நடந்தான். அவன் மேல் என்னவோ வந்து விழுந்தது. எடுத்துப் பார்த்தான். அது ஒரு காகித ஏரோ. யார் விட்டிருப்பார்கள்?

மாது நிமிர்ந்து பார்த்தான். எதிரே இருந்த பல மாடிக் குடியிருப்பின் ஜன்னல் வழியாக ஒரு சிறுவன் கையசைத்து 'டாடா' சொன்னான்.

பதிலுக்கு 'டாடா' சொல்லிக் கையசைத்து அந்த காகித ஏரோவை விட்டுக் கொண்டே நடந்தான் மாது.

வழியில் கடை வீதி. ஒரு சர்பத் கடை. திராட்சையைப் பிழிந்து விட்டு, பிளக்கை எடுத்து மாட்டிவிட்டு, வடிகட்டியை எடுக்கத் திரும்பினார் கடைக்காரர்.

மாது விட்ட 'ஏரோ' சர்பத் கடைக்குள் புகுந்து, கடைக்காரர் மாட்டியிருந்த பிளக் பின்னில் சிக்கி நின்றது.

"சனியனே... வந்து எடுத்துக் கொண்டு போடா'' என்று சீறி வாழ்த்தி அனுமதித்தார் கடைக்காரர்.

மாது கடைக்குள் நுழைந்து, பிளக் பின்னில் சிக்கிக் கொண்டிருந்த 'ஏரோ'வை இரு கைகளாலும் பிடித்து இழுத்தான். மின் இணைப்பு ஏற்பட்டு மிக்ஸி இயங்க ஆரம்பிக்க, மேல் மூடியில் பிழிந்து வைத்திருந்த, திராட்சை ஜூஸ் சிதற கடைக்காரரின் முகமெல்லாம் ஜூஸ்! காத்திருந்தவர்களின் சட்டையெல்லாம் பாழ்!

என்ன நடந்தது என்பதை மற்றவர்கள் உணருமுன்பே மாது உணர்ந்து கொண்டு சிட்டாகப் பறந்தான். பின்னால் 'பிடிபிடி' என்ற சத்தம் கேட்டது.

சுற்று வழியாகச் சுற்றிக் கொண்டு மாது வீட்டுக்கு வந்தபோது அம்மா 'கடுகடு'வென்றிருந்தார். அருகே பிள்ளையார் கோவிலில் பீதி அடைந்த பாட்டி!

என்ன நடந்திருக்கும் என்பதை மாது ஊகித்துக் கொண்டான். புத்தகப் பையை இறக்கிவிட்டு, கை, கால் கழுவிக் கொண்டு, சாமி அலமாரிக்கு வந்தான். விபூதியை இட்டுக் கொண்டு, ''நான் பண்ணியது தப்பு. இனிமே இப்படிப் பண்ண மாட்டேன்!'' என்று கூறிக் கொண்டே தோப்புக்கரணம் போட ஆரம்பித்தான்.

"ஒன்று... இரண்டு... மூன்று..."

"காதுகளைப் பிடித்தபடி, எத்தனை அம்மா போடட்டும்? மூன்று போதுமா... இல்லே ஒன்பது, பன்னிரண்டா?" என்று மாது கேட்கவும், எல்லோரும் சிரித்தனர்.

''அம்மா சொல்லாமலேயே போட ஆரம்பிச்சிட்டியே! தங்கமான பிள்ளை. மூணு போதும்பா'' என்று அம்மாவுக்குப் பதில் பாட்டி உத்தரவிட்டார்.

பள்ளியில் அடுத்த நாள் இதைவிடக் கடுமையாகத் தன்னை விசாரித்துத் தண்டனை வழங்கப் போகிறார்கள் என்பதை மாது எப்படி அறிவான்?

(தொடரும்)

சக்திமானின் படம் வண்ணத்தில் வெளியிடாதது ஏன்?



✉ அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி முடிவுகளைப் பார்த்ததும் இன்ப அதிர்ச்சியடைந்தேன். எனது முதல் முயற்சியே வெற்றியடைந்ததால் மனம் கிறுகிறுக்க ஆரம்பித்து விட்டது. என்னை ஓர் எழுத்தாளனாக உருவாக்கிய கோகுலத்திற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து கதை, கட்டுரைகளை எழுதி அனுப்புகிறேன்.

— ஜி. ரமணி,
பத்தாம் வகுப்பு,
கணக்கன்பட்டி,
பழனி.

✉ 'மின்கல மாதவன்' முதல் அத்தியாயமே மிகவும் விறுவிறுப்பாய் உள்ளது. அடுத்த இதழை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

— பா. தில்லை நடராஜன்,
திருச்செந்தூர்.

✉ முதல் பரிசு பெற்ற 'வீடியோ கேம்' கதை அருமை. முடிவு படுயதார்த்தம், கதை எழுதிய ரமணிக்கு பாராட்டுகள்.

— ப.ராமகிருஷ்ணன்,
காயக்காடு.

✉ கோகுலம் எனக்கு எவ்வளவு பிடிக்குமோ, அதேபோல் சக்திமான் தொடரும் ரொம்பப் பிடிக்கும். கோகுலத்தில் போட்டோவைப் பார்த்ததும் மகிழ்ச்சி. ஆனால் வண்ணத்தில் வெளியிடாதது ஒரு குறைதான்.

— என். சிவகுமார்,
வண்ணாரப்பேட்டை.

✉ பைசா நகர சாய்ந்த கோபுரம் பற்றிய கட்டுரையும் வண்ணப் படமும் வெகு அருமை. அதை நிமிர்த்தப் போகும் சீனக் கட்டடக் கலைஞருக்கு வாழ்த்துகள்.

— எம். ரஃபிக் ஜக்காரியா,
நன்னிலம்.

✉ என் அபிமான கிரிக்கெட் வீரர்களான சச்சின், கும்ளே சாதனைகளை வெளியிட்டு, விளையாட்டுச் செய்திகளுக்கு பக்கங்களை அதிகரித்திருப்பது வரவேற்கக் கூடிய விஷயம்.

— ஆர். திவாகர்,
மிட்டூர்,
வேலூர் மாவட்டம்.

✉ பல வண்ணப் பூனைகளின் படங்கள் கண்களைக் கவர்ந்தன. ஜீன் மாறிய உருளைக்கிழங்கு விரைவில் புழக்கத்திற்கு வர வேண்டும்.

— மா. காவ்யாராணி,
ஒசூர்.

✉ தீரசேனன் வென்ற தில்லை மலையை இவ்வளவு விரைவில் முடித்து விட்டீர்களே!

— கே. பிரதாப்,
எட்டாம் வகுப்பு,
திருச்சி.

✉ 'கிணற்றில் குதித்த பேய்' கதை இயல்பாக இருந்தது. என் வயதை ஒத்த மாணவன்தான் எழுதியிருக்கிறார் என் பதை படித்தபோது எனக்கும் எழுத ஆவல் பிறந்துள்ளது.

— ஆர். ஜான்சன்,
மதுரை

கோலப்போட்டி முடிவுகள்



மாலா பி. கண்ணா,
பன்னிரெண்டாம் வகுப்பு,
திருச்சி



இரா. செண்பகப் பூங்குழலி,
ஏழாம் வகுப்பு, கோவை – 9.



எம். சங்கீதா,
காரைக்கால்




ந. வேல்மதி,
ஏழாம் வகுப்பு, திருநெல்வேலி




எஸ். நித்யா, பத்தாம் வகுப்பு,
சிக்கல், நாகை மாவட்டம்.

டி. நடேஷ்ராணி,
எட்டாம் வகுப்பு, திருவிடைமருதூர்.





எஸ். வகுளா, ஒன்பதாம் வகுப்பு,
பெருமாள்புரம் திருநெல்வேலி



எஸ்.வளர்மதி,
காந்திரோடு, வேலூர்


ஆர். ரேணுகா, எட்டாம் வகுப்பு,
ராணிப்பேட்டை.



● எம். செந்தில்குமார், சந்தைபுதுப்பாளையம்.

? சிறுநீர் மஞ்சள் நிறமாக வருவது ஏன்?

! ஆரோக்கியமாக உள்ள ஒருவருடைய சிறுநீர் வெளிர் மஞ்சள் நிறத்தில் இருக்கும். சிறுநீரில் 95 சதவீதம் தண்ணீரும், 5 சதவீதம் கழிவுப் பொருள்களும் உள்ளன. கழிவுப் பொருள்களில் கரிமப் பொருள்களும் (organic), கனிமப் பொருள்களும் (inorganic) அடங்கும். யூரியா, யூரிக் அமிலம், கிரியேட்டினின் போன்றவை கரிமப் பொருள்கள். சோடியம், கந்தகம், பாஸ்பரஸ், பொட்டாசியம் உப்புகள் கனிமப் பொருள்கள். இந்த இருவகை கழிவுப் பொருள்கள்தான் சிறுநீருக்கு வெளிர் மஞ்சள் நிறத்தைத் தருகின்றன. காய்ச்சல், சிறுநீர்க் கடுப்பு, மஞ்சள் காமாலை, மாத்திரைகளின் பக்க விளைவுகள் போன்ற வற்றின் காரணமாக சிறுநீரின் மஞ்சள் நிறம் அதிகரிப்பதுண்டு.



● பி. கோவிந்தசாமி, ஊத்தங்கரை.

? மாரடைப்பு பெரும்பாலும் அதிகாலை நேரத்திலேயே வருவது ஏன்?

! முதல் நாள் இரவில் நன்கு ஓய்வு எடுத்துவிட்டு, காலையில் பரபரப் பாக இயங்குவதுதான் காலை நேரத்தில் மாரடைப்பு வருவதற்குக் காரணமாக அமைகிறது. எப்படியெனில், எழுந்ததும் பரபரப்பாக இயங்கத் துவங்கும்போது உடலின் இயல்பான செயல் சுழற்சிகள் மற்றும் இயக்குநீர் (Hormone) இயக்கங்கள் மாறுபடுகின்றன. இவை இதயத்திற்குச் செல்லும் ரத்த ஓட்டத்தைத் தடை செய்கின்றன



காளான் சாப்பிடுவது நல்லதா?

விளைவு, மாரடைப்பு. இம்மாதிரியான அசம்பாவிதங்களைத் தவிர்க்கவே காலை எழுந்ததும் நடைப்பயிற்சி, மெல்லோட்டம், யோகாசனம், தியானம், உடற்பயிற்சிகள் ஆகியவற்றில் ஒன்றை அவசியம் மேற்கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

● அ. வெற்றிவேல், காங்கேயம்.

? காளான் சாப்பிடுவது நல்லதா?

! நல்லதுதான். காளானில் புரதச்சத்து, கொழுப்புச்சத்து, மாவுச்சத்து உள்ளன. உடலுக்கு சக்தி தருகின்ற சத்துணவு இது. என்றாலும் காளான் விஷயத்தில் சிறிது எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டியது முக்கியம். எல்லா வகைக் காளான்களையும் நாம் சாப்பிட முடியாது. உண்ணுவதற்கு ஏற்றவை, தவிர்க்க வேண்டியவை என்று இருவகைக் காளான்கள் உள்ளன. இரண்டாம் வகையில் எச்சரிக்கை தேவை. ஏனென்றால் அவை கல்லீரலைப் பாதித்து உயிரை மாய்த்து விடக் கூடும். (எ-டு Amanita, Galerina காளான்கள்)



● எஸ். குமரேசன், குத்தாலம் – 1.

! 'கொலஸ்ட்ரால்' என்றால் என்ன, டாக்டர்? கொஞ்சம் விரிவாகக் கூறுங்களேன்...?

! கொலஸ்ட்ரால் (Cholesterol) என்பது, கொழுப்புச் சத்தின் ஒருவகை. மாமிசம், முட்டை, எண்ணெய், வெண்ணெய், வனஸ்பதி போன்ற கொழுப்பு உணவுகளிலிருந்து இது நமக்குக் கிடைக்கிறது. பலரும்

நினைப்பது போல அதிகப் பருமன் உள்ளவர்களுக்குத்தான் கொலஸ்ட்ரால் இருக்கும் என்பதில்லை. இது எல்லோருடைய உடலி லும் இருக்கும். முக்கியமாக ரத்தத்தில் இது 180 மி.கி/100 மி.லி. என்ற அளவில் கண்டிப்பாக இருக்க வேண்டும். இது குறைந்தாலும் பிரச்னை; கூடினாலும் பிரச்னை. குறைந்தால் மனநோய்கள் வரும்; கூடினால் இதய நோய்கள் வரும். கொலஸ்ட்ரால் நம் உடலில் பல பணிகளைச் செய்கிறது. வைட்டமின் D தயாரிக்கக் கொலஸ்ட்ரால் தேவை. கல்லீரலில் பித்த நீர் (Bile) சுரப்பதற்கும் இது தேவைப்படுகிறது. இவ்வளவு ஏன், மனித இனத்தில் ஆண், பெண் இனங்களை நிர்ண யிப்பதே கொலஸ்ட்ரால்தான். எப்படி? கொலஸ்ட்ராலில் இருந்து தான் ஆண், பெண் இனத்தை நிர்ணயிக்கின்ற 'பாலின இயக்குநீர்கள்' (Sex Hormones) உருவாகின்றன. இன்னொரு முக்கியச் செய்தி. கொலஸ்ட் ராலில் இருவகை உண்டு. மிகை அடர்த்திக் கொலஸ்ட்ரால், குறை அடர்த்திக் கொலஸ்ட்ரால். முதலாவதாகக் கூறப் பட்டது 'நன்மை செய்யும் கொலஸ்ட்ரால்' என்று அழைக்கப்படுகிறது. காரணம், இதன் அளவு நமக்கு அதிகமாக இருந்தால் மாரடைப்பு வராது. இரண் டாவது வகைக்குத் 'தீமை செய்யும் கொலஸ்ட்ரால்' என்று பெயர். காரணம், இதனுடைய அளவு ரத்தத் தில் அதிகரித்தால் மாரடைப்பு மட்டுமின்றி பிற ரத்தநாள நோய்கள் வருவதற்கும் அதிக வாய்ப்புகள் உருவாகும்.





● எம். சிவசங்கர், ரெட்டியார்பட்டி.

? என் காதுக்கு அருகில் ஒரு சிறிய கட்டியும், ஒரு பெரிய கட்டியும் உள்ளன. இதற்கு என்ன செய்யலாம், டாக்டர்?

! கட்டி சாதாரணக் கட்டியா, காச நோய்க் கட்டியா, புற்று நோய்க் கட்டியா என்பதை அறிய ரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே மற்றும் திசுப் பரிசோதனை (Biopsy) களைச் செய்ய வேண்டும். சாதாரணக் கட்டியாக இருந்தால் அறுவை சிகிச்சை செய்து அகற்றி விடலாம். காச நோயைச் சார்ந்தது என்றால் மருத்துவ சிகிச்சையில் குணப்படுத்தி விடலாம். புற்று நோயாக இருந்தால் கட்டியின் நிலைமையைக் கணித்து அதற்கேற்ப சிகிச்சை தரப்படும். எதற்கும் உன் அருகில் உள்ள அறுவை சிகிச்சை நிபுணரைச் சந்தித்து ஆலோசனை பெற்றால் உன் பிரச்னைக்குத் தீர்வு கிட்டும்.

கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர் கு. கணேசன்



● டி. ஜோஷ்வின், ஐரேனிபுரம்.

? டானிக் பாட்டில்கள் பெரும்பாலும் பிரௌன் கலரில் இருப்பதற்கு விசேச காரணம் ஏதேனும் உண்டா, டாக்டர்?

உண்டு. டானிக் பாட்டில்களில் உள்ள மருந்து அல்லது சத்துப் பொருள் நெடுங்காலம் பாதுகாப்பாக இருக்க வேண்டியிருக்கும். இவற்றைக் குளிர்சாதனப் பெட்டியில் வைக்க முடியாது; கடைகளில் வெளிப் பார்வைக்குத் தெரிகிற மாதிரிதான் வைக்க வேண்டியிருக்கும். அப்போது சூரிய வெளிச்சம் பாட்டிலுக்குள் உள்ள பொருளைக் கெடுத்து விடக் கூடாதல்லவா? அதற்காகத்தான் சூரிய வெளிச்சம் பாட்டிலுக்குள் அவ்வளவாகப் புகா வண்ணம் தடுக்கின்ற பிரௌன் பாட்டில்களை டானிக் பாட்டில்களுக்குப் பயன்படுத்துகிறார்கள்.



கிறிஸ்துமஸ் மாதத்தில்...

காட்சி 1

இடம்: ஜான் வீடு

(ஜான், டேவிட், நசரீனா வராந்தாவில் உரையாடிக் கொண்டிருக்கிறார்கள்)

ஜான்: டேவிட்! இன்னிக்கு தேதி அஞ்சு. கிறிஸ்துமஸ்ஸுக்கு இன்னும் இருபது நாள்தான் இருக்கு. அப்பாகிட்டே சொல்லி நாளைக்கே நாம எல்லாரும் புது டிரஸ் எடுத்துக்கிட்டு வந்துடணும்.

டேவிட்: ஆமாம் ஜான்! நசரீனா தான் என்னென்ன டிரஸ் வாங்கணும்னு ஒரு லிஸ்டே எடுத்து வச்சிருக்காளே!

ஜான்: அதுவும் நல்லதுதான். டேவிட், நேத்து ஒரு புத்தகத்திலே செய்தி படிச்சேன். சொல்ல மறந்துட்டேன்.

டேவிட்: என்ன செய்தி?

ஜான்: ஜெர்மனியிலே செயின்ட் நிக்கலோன் என்பவர் மாறுவேஷத்தில் ஒவ்வொரு டிசம்பர் அஞ்சாம் தேதியும் குழந்தைகளை சந்திச்சு பேசிட்டுப் போறாராம். அப்புறம் கிறிஸ்துமஸ் அன்னிக்கு அவர்களுக்குப் பரிசுகளும் தருகிறாராம். அதேமாதிரி பல நாடுகளில் சான்டா கிளஸ்ங்கிற பெயர்லே பல பேர் கிறிஸ்துமஸ் தாத்தா வேஷம் போட்டுட்டு பல குழந்தைகளுக்கும் பரிசுகள் தராங்களாம்.

டேவிட்: அதே மாதிரி நம்ம வீட்டுக்கும் ஒரு கிறிஸ்துமஸ் தாத்தா வந்தா, கிறிஸ்துமஸ் பரிசா நான் எதைக் கேட்பேன் தெரியுமா?

நசரீனா: என்ன கேட்பே?

டேவிட்: ஒரு நல்ல கேமரா வேணும்னு கேட்பேன்! நீ?

நசரீனா: சினிமாப் பாட்டு ரிகார்டு பண்ண ஒரு ஆடியோ கேஸட் வேணும்னு கேட்பேன்! ஜான், நீ என்ன கேட்பே?

ஜான்: ஏ.கே. 47 மாதிரி புதுசு புதுசா கடைகளில் விக்கற விளையாட்டுத் துப்பாக்கிகள் கேட்பேன்.

டேவிட்: முதலில் கிறிஸ்துமஸ் தாத்தா வரட்டும்; அப்புறம் பரிசுகள் கேட்போம்.

ஜேக்கப்: வந்துட்டேன்... இதோ வந்துட்டேன். குழந்தைகளா! வாசல் பக்கம் பாருங்க!

ஜான்: யாரது?... கிறிஸ்துமஸ் தாத்தாவா?... ச்சே! இது யாரோ? போப்பா... வீட்லே யாரும் இல்லே!

ஜேக்கப்: தம்பி, நான் உங்களைக் காட்டிலும் வயசுலே ரொம்பப் பெரியவன்... நான் கந்தல் டிரஸ்ஸுலே

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

இருக்கேன்னு மரியாதைக் குறைவா பேசாதிங்க!

டேவிட்: ஜான், இவர் கையிலே ஒரு பூனைக்குட்டி வேற பார்த்தியா!

ஜேக்கப்: தம்பி, எனக்கு ஒரே பசியா இருக்கு. ஏதாவது சாப்பிடக் கொடுங்க!

டேவிட்: அதெல்லாம் ஒண்ணும் இல்லேப்பா... மாதா கோவில் வாசலுக்குப் போ... காசு போடுவாங்க!

ஜேக்கப்: தம்பி, இந்தப் பூனைக் காச்சும் கொஞ்சம் பால் கொடுங்க...

நசரீனா: பாலும் இல்லே... பசிக்கு சாப்பாடும் இல்லே!... காசும் இல்லே போ!

ஜேக்கப்: குழந்தைகளா! கிறிஸ்துமஸ் தினத்தைக் கொண்டாட நீங்க ஆவலா காத்துக்கிட்டிருக்கீங்க... ஸ்காண்டிநேவியா நாடு உங்களுக்குத் தெரியுமில்லே...

நசரீனா: தெரியும்! படிச்சிருக்கோம்!

ஜேக்கப்: அங்கே ஒவ்வொரு கிறிஸ்துமஸ் தினத்திலேயும் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும்கூட மதிப்பு கொடுத்து, அவைகளை அலங்கரிச்சு அன்பா நடத்தி விருந்து போடறாங்க! அது மட்டுமில்லே... கனடா நாட்டிலே இருக்கிற பிரெஞ்சுப் பகுதியிலே பூனைகளுக்கு ஏக மதிப்பு! கிறிஸ்துமஸ் அன்னிக்கு அவைகளை நல்லா கவனிச்சு விருந்தும் வைக்கறாங்க... ஆனா வசதி படைச்ச நீங்க, இந்தப் பூனைக்குக்கூட...

டேவிட்: நீ சரியான உலகம் சுற்றும் தாத்தா போலிருக்கு.

ஜான்: அது எங்க இஷ்டம்! உங்களுக்கு வேணும்னா வீட்டுக்குப் பின்னால, குழாய் இருக்கு... அடிச்சுப் பாருங்க... தண்ணி வந்தா நீங்களும் குடிச்சுட்டு, பூனைக்கும் கொடுத் துட்டுப் போங்க!

ஜேக்கப்: குறும்புக்காரப் பசங்க... தம்பி, உள்ளே யாருப்பா அப்பப்போ இருமிக்கிட்டும் முனகிக்கிட்டும் இருக்காங்க....

டேவிட்: அது எங்க தாத்தா!... அவருக்கு உடம்பு சரியில்லே!.... அப்படித்தான் இருமிக்கிட்டிருப்பார். அப்பா, அம்மா வெளியே போயிருக்காங்க! வந்ததும் கவனிச்சுக்குவாங்க!

ஜேக்கப்: உள்ளே போய் உங்க தாத்தாவுக்கு என்ன வேணும்னு கேட்டு, மருந்து மாத்திரை இருந்தா எடுத்துக் கொடுங்கப்பா!

ஜான்: அதெல்லாம் நாங்க தர மாட்டோம்... நீ பேசாம போ!

ஜேக்கப்: நீங்க அடிக்கடி சர்ச்சுக்குப் போய் தியானம் செய்வீங்களா? கர்த்தர்கிட்டே என்ன கேட்பீங்க?

டேவிட்: அதைப் பத்தி நீ கேட்க வேண்டாம்!

ஜேக்கப்: கிறிஸ்து பிறந்தது டிசம்பர் இருபத்தைஞ்சு! உங்க வீட்டு நெம்பரும் இருபத்தைஞ்சு! ஆனா நீங்க ஏன் இப்படி இருக்கீங்க? கர்த்தர் உங்களுக்கும் ஏதாவது பரிசுகள் தருவார்! வரேன்!


காட்சி 2

இடம்: ஜார்ஜ்ஜின் குடிசை வீட்டு முன்புறம்

விக்டோரியா: ஜார்ஜ், என்ன ரொம்ப நேரமா புத்தகங்களையே பார்த்துக்கிட்டிருக்கே?

ஜார்ஜ்: ஆமாம் விக்டோரியா! நம்மோட இந்தக் குடிசை வீட்டுக்குள்ளே நாம சேகரிச்சு வச்சிருக்கிற இந்தப் புத்தகங்களைப் பத்திதான் நான் கவலைப்பட்டுக்கிட்டிருக்கேன். நமக்குப் பரிசாக வந்த நல்ல புத்தகங்களும், நாமாக வாங்கின புத்தகங்களும் எவ்வளவு சேர்ந்துட்டுது பார்! இதை ஒழுங்கா பாதுகாக்கணுமேன்னுதான் கவலைப்பட்டுக்கிட்டிருக்கேன்.

விக்டோரியா: ஆமாம். அவ்வளவும்



"எதுக்கு அந்த பல் மருத்துவமனை முன்னாடி யானையைக் கட்டி வைச்சிருக்காங்க?"

"கடினமான பல்லை கட்டி இழுக்கத்தான்!"

— பொன். குமார்



அருமையான நூல்கள்! ஒரு புத்தக அலமாரி இருந்தால் அழகாக அடுக்கி குறிப்பெழுதி வைத்துக் கொள்ள லாம்.

ஜார்ஜ்: ஆனா நாம இதிலே பாதிப் புத்தகங்களைக்கூட இன்னும் ப்டிக் கலே..

விக்டோரியா: எப்படி படிக்க முடியும்? காலையிலே ஐந்து மணிக்கு எழ வேண்டிய நாம, ஆறு மணிக்குத்தானே எழுந்துக்கிட்டு வரோம்! அப்பா அம்மாவும் நம்மைப் போலவே தூங்கிப் போயிடறாங்க!

ஜார்ஜ்: நம்மை எழுப்ப ஒரு அலாரம் கடிகாரம் இருந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்? ... விக்டோரியா... அதோ பார்... நம்ம வீட்டு வாசல்லே யாரோ கிழே விழுந்து கிடக்காங்க! வா போய்ப் பார்க்கலாம்!

விக்டோரியா: பாவம்! வா பிடிச்சு மெதுவா உள்ளே அழைச்சுக் கிட்டுப் போவோம்!... இந்தப் பூனைகூட இவர் வளர்க்கிற பூனை போல இருக்கு! கூடவே நடந்து வருது!

ஜார்ஜ்: ஐயா, இந்தாங்க தண்ணி குடிங்க... ரொம்பப் பசியா இருக்கிங்க போலிருக்கு! இந்த ரொட்டியையும் பாலையும் சாப்பிடுங்க! விக்டோரியா!... பூனைக்கும் இந்தப் பாலை எடுத்து, அந்தத் தட்டுலே விடு... குடிக்கட் டும்!

விக்டோரியா: ஐயா! இன்னும் ரொட்டி இருக்கு போட்டவா!

ஜார்ஜ்: போதும்மா! போதும்! ரொம்ப நன்றி! உள்ளே யாரும்மா முனகிக்கிட்டிருக்காங்க!

விக்டோரியா: எங்க பாட்டிதான்... ஐயய்யோ... இப்ப மருந்தும் மாத்திரை

யும் தர வேண்டிய நேரம்! மறந்தே போயிட்டேன்! கொடுத்துட்டு வந்துடறேன்.

ஜேக்கப்: உங்க அப்பா அம்மா எங்கே?

ஜார்ஜ்: கிறிஸ்துமஸ்ஸுக்கு புதுதுணி எடுக்கப் போயிருக்காங்க!

ஜேக்கப்: ஜார்ஜ், விக்டோரியா - நீங்க வசதிக்குறைவான குடும்பத்திலே பிறந்திருக்கீங்க! இருந்தாலும் வறுமையிலேயும் செம்மையா நடந்துக்கற உங்களை இன்னிக்கு சந்தித்ததிலே பெருமைப் படறேன். நான் கேட்காமலேயே எனக்கு உணவும், பூனைக்குப் பாலும் கொடுத்து அன்போடு நடந்துக்கிட்ட உங்களை கர்த்தர் ஆசிர்வதிப்பார் வரேன்!

காட்சி 3

இடம்: தெரு

ஜார்ஜ்: டேவிட், நாசரீனா, ஜான் உங்களுக்கு எங்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்! நீங்க எங்கே போய்க்கிட்டிருக்கீங்க?

டேவிட்: நாங்க மைக்கேல் தெரு இருபத்தைந்தாம் எண் பங்களாவிற்குப் போய்க்கிட்டிருக்கோம்! அங்கே கிறிஸ்துமஸ் தாத்தா எங்களுக்குப் பரிசு கொடுக்கப் போறாராம்! வரச் சொல்லி செய்தியனுப்பிருக்கார்!

விக்டோரியா: அப்படியா? எங்களையும் கிறிஸ்துமஸ் தாத்தாதான் அதே பங்களாவிற்கு வரச் சொல்லியிருக்கார்! சரி, வாங்க எல்லோரும் ஒண்ணா போகலாம்!

காட்சி 4

இடம்: ஜேக்கப் வீடு

கிறிஸ்துமஸ் தாத்தா: ஓ! குழந்தைகளே! வந்துட்டீங்களா? வாங்க வாங்க! உங்கள் எல்லோருக்கும் என் கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்! எல்லாரும் இந்த அழகான கிறிஸ்துமஸ் மரத்தின் கீழ் வாருங்கள்.

ஜார்ஜ்: தாத்தாவிற்கும் எங்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துகள்!

கிறிஸ்துமஸ் தாத்தா: ஜார்ஜ், விக்டோரியா! உங்களை கிறிஸ்துமஸ் கரோல் குழுவில் பார்த்தேன். பக்தியுடன் நன்றாகப் பாடினீர்கள்! குழந்தைகளே, உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி! உங்களுக்குத் தேவையான பரிசுப் பொருட்களை இந்தக் கிறிஸ்துமஸ் மரத்தில்தான் கட்டித் தொங்கவிட்டுள்ளேன்.


விக்டோரியா: தாத்தா, எங்களையும், எங்கள் பெயரையும் உங்களுக்கு எப்படித் தெரியும்? எங்களுக்கு எதற்குப் பரிசு?

கிறிஸ்துமஸ் தாத்தா: அதைப் பிறகு சொல்கிறேன். இதோ பாருங்க! உங்கள் பெயர்கள் எழுதியுள்ள கயிறுகளை இழுத்தால், அவரவர்களுக்குத் தனித் தனிப் பெட்டிகளில் பரிசுகள் வரும்! ம்! எல்லோரும் உங்கள் கயிறுகளை இழுத்து முடிச்சு அவிழுங்கள், குழந்தைகளே!

ஜார்ஜ்: தாத்தா, எனக்கு வந்த அட்டைப் பெட்டிக்குள் ஒரு புத்தக அலமாரியின் புகைப்படத்துடன் கூடிய ஒரு குறிப்பு அட்டையும், கூடவே கேரண்டி அட்டையும் இருக்கின்றன.

தாத்தா: ஆமாம்! அதோ பார்! அந்தப் புத்தக அலமாரிதான் உனக்குக் கிடைத்திருக்கும் பரிசு! போய்ப் பார் ஜார்ஜ்! ம்!

விக்டோரியா: தாத்தா, எனக்குத்



"ஏண்டா ராமு! நீ படிக்கும்போது ரொம்பவும் பொறுமையாகவும் மெதுவாகவும் எந்தக் காரியத்தையும் செய்வியே! இப்ப என்ன வேலையில் இருக்கே?"

"ரோடு ரோலர் டிரைவராக இருக்கேன்!"

— ஆரூர் ராஜலட்சுமி

கிடைச்ச பெட்டியிலே ஒரு அழகான அலாரம் கடிகாரம் இருக்கு!

கிறிஸ்துமஸ் தாத்தா: சபாஷ்! அது உனக்குச் சேர வேண்டிய பரிசுதான்.

ஜான்: என்ன தாத்தா இது? கிறிஸ்துவின் பொன்மொழிகள் போட்ட ஆடியோ கேஸட்டுதான் எனக்கு வந்த பெட்டியிலே இருந்தது!

நசரீனா: எனக்கு பிராணிகள்ளை நேசியுங்கள்னு போட்ட புத்தகந்தான் பரிசா வந்திருக்கு! பெட்டிதான் பெரிசா இருக்கு!

டேவிட்: எனக்கும் சாதாரண கட்டுரை நூல்தான் கிடைச்சிருக்கு! 'நோயாளிகளையும், எளியோர்களையும் நேசிப்பது எப்படி?' - இதான் இதோட தலைப்பு!

ஜோசப்: இதெல்லாம் ஒரு பரிசா? எங்களுக்குப் பிடிக்காத பரிசு!

கிறிஸ்துமஸ் தாத்தா: ஆனா, உங்களுக்குத் தகுதியான பரிசுகள்தான் கிடைச்சிருக்கு! ஜான், டேவிட், நசரீனா உங்க இதயத்திலே ஏழைகளுக்கு இரங்கற குணம் இல்லே! பிராணிகளிடம் அன்பு இல்லே! பெரியவங்களை மதிச்சு நடக்கற பண்பு இல்லே! கர்த்தர்கிட்டே பக்தியும் இல்லே! இதைப்பத்தி உங்களுக்கு எடுத்துச் சொல்லத்தான் இந்தப் பரிசுகளை ஏசு உங்களுக்கு அனுப்பியிருக்கார்.

டேவிட்: தாத்தா நாங்க நல்லவங்கதான்!

கிறிஸ்துமஸ் தாத்தா: டிசம்பர் அஞ்சாம் தேதி, உங்க பங்களாவுக்கு ஒரு பூனையோடு வந்த ஏழையை நீங்க அவமானப்படுத்தினீங்க! அவனுக்குத் தண்ணி கொடுக்கக்கூட கஷ்டப்பட்டீங்க! வீட்டிலே இருக்கிற வயதான நோயாளியையும் அலட்சியப்படுத்திப் பேசினீங்க! நான் சொல்றதெல்லாம் உண்மைதானே?

ஜான்: ஹாங். உண்மைதான்.

கிறிஸ்துமஸ் தாத்தா: ஆனா விக்டோரியாவும், ஜார்ஜும் அந்த ஏழையை அவன் கேட்காமலேயே உபசரிச்சாங்க! பூனைக்கும் பால் கொடுத்தாங்க! நோயாளியைக் கவனிச்சாங்க! அதனாலதான் அவங்களுக்கு அவசியமான புத்தக அலமாரியையும், கடிகாரத்தையும் கர்த்தர் பரிசா அனுப்பி வச்சிருக்கார்!

ஜார்ஜ்: தாத்தா, எங்க பேரு எங்க தேவை, நாங்க நடந்துக்கிட்ட விதம் உங்களுக்கு எப்படி தெரியும்?

கிறிஸ்துமஸ் தாத்தா: (வேஷத்தைச் சற்று கலைத்தபடி) டிசம்பர் அஞ்சாம் தேதி உங்க ரெண்டு பேர் வீட்டுக்கும் வந்த அந்த ஏழை மனுஷன் நான்தான்!

ஐவரும்: நீங்களா!

கிறிஸ்துமஸ் தாத்தா: நானும் அந்த செயிண்ட் நிக்கலோன் மாதிரி செய்ய ஆசைப்பட்டு, ஏழை மாதிரி வேஷம் போட்டுக்கிட்டு உங்க வீட்டுக்கு வந்தேன். நான் உங்க வீட்டுக்குள்ளே நுழையறதுக்கு முன்னாடியே, நீங்க உங்களுக்குத் தேவையான பொருட்களைப் பத்தி பேசிக்கிட்டிருந்தீங்க! அதுக்கப்புறம்தான் உங்க குணங்களைத் தெரிஞ்சுக்க அப்படி நடந்துக்கிட்டேன்! இப்போ புரிஞ்சுதா?

ஜான்: தாத்தா, இந்தக் கிறிஸ்துமஸ் நாள்ளே எங்களை நல்வழிப் படுத்தினதுக்காக உங்களுக்கு ரொம்ப நன்றி!

விக்டோரியா: 'சான்டா கிளஸ் தாத்தா! தாடியைச் சரியா ஒட்ட வச்சுக்குங்க... அதோ போட்டோகிராபர் தயாரா இருக்கார்... நாம ஒண்ணா நின்னு போட்டோ எடுத்துக்குவோம்!



''கொடுக்கு கிடையாது. ஆனா கொட்டும். அது என்ன?''

''தெரியலையே!''

''தலைமுடிதான்!''

— மு. தனகோபால்




எங்கள் பள்ளியில் நடந்தது!

ஊசி போடுவாரா?

வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர். அப்போது தலைமை ஆசிரியரிடம் இருந்து ஒரு சுற்றறிக்கை வந்தது. ''நாளை நடை பெறும் இலக்கிய மன்ற விழாவிற்கு டாக்டர் பொன்னம்பலம் வருகிறார். அவசியம் கலந்து கொள்ள வேண்டும்'' என்று வாசித்து முடித்தார் ஆசிரியர். என் அருகில் இருந்த அப்பாவி நண்பன் ''சார், நாளைக்கு டாக்டர் வந்தால் ஊசி போடுவாரா?'' என்று கேட்டான். ஆசிரியருக்கும் எங்களுக்கும் சிரிப்பு வந்தது. பிறகு, ''அவர் மருத்துவர் இல்லை. டாக்டர் பட்டம் பெற்றவர். அதாவது முனைவர் பொன்னம்பலம். போதுமா? நாளை லீவு போட்டு விடாதே!'' எனவும் அவனும் சிரித்தான்.

– நா.பா. சிவகுமார்,
ஏழாம் வகுப்பு, அரசு
மேல்நிலைப்பள்ளி,
பெரியதச்சூர்.



என்ன வேலை?

எங்கள் வகுப்பில் புதிதாக இரண்டு மாணவர்கள் வந்து சேர்ந்தார்கள். ஆங்கில பாடவேளை. ஆசிரியர் புதிய மாணவன் ஒருவனை எழுப்பி ஆங்கிலத்தில் ''உன் பெயர் என்ன?'' என்று கேட்டார். அவன் பதில் சொன்னான். "உன் அப்பா என்ன வேலை செய்கிறார்?" என்று அடுத்த கேள்வியைக் கேட்க, அவனும் பதில் சொல்லி விட்டு உட்கார்ந்தான். ஆசிரியர் இரண்டாவது மாணவனை எழுப்பி "உன் அப்பா என்ன வேலை... என்று முடிப்பதற்குள் "முருகேசன் சார்" என்றான். "அவனைக் கேட்டதுபோல் உன்னையும் கேட்பேன்



என்று ரெடியா பதில் வச்சிருந்தியா?" என்று ஆசிரியர் கேட்க வகுப்பே சிரித்தது.

– எம். ராமசாமி
பதினோராம் வகுப்பு, சேஷபுரம்,
தென்னூர், திருச்சி – 17

தாங்க வேண்டுமே!

ஓவியப் பாட வேளை. ஆசிரியர் "உங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு ஓவியங்களை வரையலாம்'' என்று கூறினார். அனைவரும் கறுகறுப்பாக வரைந்தோம். ஒவ்வொருவரிடமும் நோட்டை வாங்கிப் பார்த்துக் கொண்டு வந்தார். ஆசிரியர் அருகில் இருந்த என் தோழியின் நோட்டைப் பார்த்த ஆசிரியர் "பிள்ளையாரைச் சின்னதாகவும் மூஞ்சுறு பெரியதாகவும்

பிள்ளையாரின் வாகனம் பெரியது!



போட்டிருக்கியே, ஏன்?'' என்று கேட்டார். "சார் பிள்ளையாரோட வாகனம்தானே மூஞ்சுறு. பிள்ளையாரை விடப் பெரிதாகப் போட்டால்தானே தாங்க முடியும்'' என்றாளே பார்க்கலாம்!

– ப. சாந்தி,
கண்டாச்சிபுரம்.

ரவுண்ட்ஸ் வருகிறார்!

அறிவியல் பாடவேளை. ஆசிரியர் வகுப்பிற்கு வரவில்லை. வகுப்புத் தலைவன் வகுப்பைக் கவனித்துக் கொண்டிருந்தான். மாணவர்கள் சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தனர். மாணவர்களை அமைதிப்படுத்த அவனும் முயற்சித்துப் பார்த்தான். முடியவில்லை. கடைசியில் "தலைமை ஆசிரியர் ரவுண்ட்ஸ் வருகிறார். அமைதியாக இருங்கள்'' என்றான். ஒரு குறும்புக்கார மாணவன் "அவர் சுற்றித்தான் வருவாரா, நேராக வர மாட்டாரா?'' என்று கேட்டான். "சுற்றாமல் நேராகவே வந்துட்டேன்'' என்ற குரல் கேட்டு வகுப்பு அமைதியானது. உண்மையிலேயே அங்கு தலைமை ஆசிரியர் நின்று கொண்டிருந்தார்!

– எஸ். கீதா,
பெரியார் நகர், சென்னை




உறவா?



எங்கள் பள்ளியில் அண்ணன், தம்பி இருவர் படிக்கின்றனர். இருவரும் ஒரே மாதிரி இருப்பார்கள். புதிதாக வந்திருந்த ஆசிரியர் அவ்விருவரையும் பார்த்து "நீங்கள் இருவரும் உறவா?'' என்று கேட்டார். அதற்கு அவன் "ஆமாம் சார்! தூரத்து உறவு'' என்றான். "சார் இவன் பொய் சொல்றான். இவனுடைய தம்பி தான்'' என்றேன் நான். ஆசிரியர் "ஏண்டா அப்படிச் சொன்னே?'' என்று கேட்டார். "சார் அவனுக்கும் எனக்கும் இடையில் இரண்டு தங்கைகள் இருக்கிறார்கள். அதனால்தான் அப்படிச் சொன்னேன்'' என்றான்.


– ஜி. அசனுல்லா,
பதினோராம் வகுப்பு, வத்தலக்குண்டு.



கிரிக்கெட் மட்டை

கண்டு பிடித்தது யார்?

அஞ்சலட்டை 1869 ஆண்டு பிப்ரவரி மாதம் 7ஆம் தேதி ஆஸ்திரேலியாவைச்



சேர்ந்த பொருளாதாரப் பேராசிரியர் ஹெர்மன் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.


(தகவல் மலர்)

– தேனி முருகேசன்

1. கிரிக்கெட் மட்டை செய்யப் பயன்படுத்தப்படும் மரம் வில்லோ மரம்.

2. நம்முடைய உடலின் கடினமான பகுதி நமது பல்லின் 'எனாமல்'தான்.


3. பறக்கும் பூச்சிகளில் வேகமாய் பறப்பது தட்டான் பூச்சி. மணிக்கு 28.7 கிலோமீட்டர் வேகத்தில் பறக்கும்.



4. தமிழக அரசின் முத்திரையில் உள்ள கோபுரத்தைக் குறிக்கும் கோயில் 'ஸ்ரீவில்லிப்புத்தூர்'.

ஆதாரம் : **பொது அறிவுக் களஞ்சியம்**

– சீர்காழி ஜே. பலராமன்



பெரிய பள்ளி!

இந்தியாவின் மிகப் பெரிய பள்ளிக் கூடம் கல்கத்தாவில இருக்கிறது. ஒரு ஆண்டில் இந்தப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை 11,683. வெறும் 17 மாணவர்களுடன் 1.4.1954ல் உருவாக்கப் பட்ட இப்பள்ளியின் பெயர் 'சவுத் பாய்ண்ட் ஹை ஸ்கூல்'.

– இரா. கமலக்கண்ணன்,
நாமகிரிப்பேட்டை.

பெயர் வந்தது எப்படி?

'உஷா' என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்துதான் ஆசியா என்று தமிழிலும் ஏஷியா என்று ஆங்கிலத்திலும் பெயா வந்தது. உஷா என்ற வடமொழிச் சொல்லுக்கு, 'விடியற்காலம்' என்று பொருள். அதாவது 'சூரியன் முதலில் உதிக்கும் நாடு' என்பது அதன் அர்த்தம்.

ஆதாரம் : **பெயர் வந்தது எப்படி?**

– கே.ஆர். உதயகுமார்.

1. கவர்னர் பதவி வகித்த முதல்

எதில் செய்யப்படுகிறது?



இந்தியர். லார்டு சின்ஹா.

2. மூங்கில் ஒரு நாளில் மூன்றடி கூட வளரும்.

3. இந்தியாவில் மணியார்டர் சேவை 1880ல் ஆரம்பித்தது.


4. சென்னை மியூசியம் 1851ல் தொடங்கப்பட்டது.

5. ஆங்கில எழுத்துகளில் அதிகம் பயன்படுவது 'E'.

6. பெருலா செடி வெளியிடும் திரவமே பெருங்காயம்.

ஆதாரம் : **சூப்பர் நியூஸ்**

– பி.என்.என். ராஜன்




ஸ்டாம்பு துளைகள்

ஸ்டாம்புகள் தோன்றிய காலத்தில் அவற்றைத் தனித்தனியே கிழித்தெடுக்கத் துளைகள் இல்லை. இங்கிலாந்தைச் சேர்ந்த ஹென்றி ஆர்ச்சர் என்பவர் 1848ம் ஆண்டில் தபால் தலைகளைச் சுலபமாகக் கிழித்து எடுக்கும் வகையில் துளை போடும் கருவியைக் கண்டு பிடித்தார்.

நாணயத்தில் உருவம்

நாணயத்தில் தம் உருவத்தைப்



பொறித்த முதல் அரசர் மகா அலெக்சாண்டர்தான். கி.மு. 336ல் தம் உருவம் பொறித்த நாணயங்களை முதலில் வெளியிட்டார்.

ஆதாரம் : **அட - அப்படியா!**


தகவல் : **நெ. இராமன், சென்னை - 74.**

லெட் பென்சில்

லெட் பென்சிலில் 'லெட்' என்று எதுவும் இல்லை. பென்சிலில் உள்ள எழுது பொருளான கிராபைட்டுக்கு பிளாக் லெட் என்று பெயர் உள்ளது. அந்த பிளாக் லெட் பென்சில்தான் சுருங்கி 'லெட்' பென்சில் என்று பெயர் பெற்று விட்டது."

– ஆ. தமிழ் துரைசாமி,

பாலசமுத்திரம்.





கண்ணே, மூக்கே ஆபத்து!

கண்ணாத்தா, மூக்காயி என்று அரண்மனையில் இரு பணிப்பெண்கள் இருந்தனர். அவர்களை அரண்மனையிலுள்ளவர்கள் சுருக்கமாக கண்ணி, மூக்கி என்றழைப்பார்கள். சமயம் பார்த்து இருவரும் அரண்மனையிலுள்ள தங்க சந்தனப் பேலாவையும், பொன் வட்டிலையும் திருடி விட்டார்கள்.

எப்படியெல்லாமோ கேட்டுப் பார்த்தும் யாரும் உண்மையை ஒப்புக் கொள்ளவில்லை.

அப்போது ஒரு ஜோதிடர், "அரசே! எங்கள் வீட்டுக்கு அருகில் ஒரு ஜோதிடர் இருக்கிறார். நம் அரண்மனைக் கழுதை காணாமல் போய் விட்டது. வண்ணான் அவரிடம் போய், ஆருடம் கேட்க, 'கழுதை கெட்டால் குட்டிச்சுவர்' என்று அலட்சியமாகச் சொன்னாராம். போய்ப் பார்த்தால் ஊர்க்கோடியில் உள்ள குட்டிச்சுவரருகில் கழுதை நிற்கிறதாம்!" என்றார்.

உடனே மன்னர், அந்த ஜோதிடரை அழைத்து வர ஆணையிட்டார்.

ஜோதிடர் நடுங்கிக் கொண்டே, "கொற்றவா! நான் முழு மூடன். எனக்கு ஜோதிடம், ஆருடம் எதுவும் தெரியாது. பிழைப்புக்காக என்னிடம் வருபவர்களின் வாயைக் கிளறி உண்மைகளைத் தெரிந்து கொண்டு யூகமாக எதையோ சொல்கிறேன். என்னை விட்டு விடுங்கள்" என்று கெஞ்சினார்.

வேந்தன் சினத்தோடு, "உனக்கு அகந்தை தலைக்கேறி இருக்கிறது. இன்றைக்கு எட்டாம் நாளுக்குள் களவு போன பொருட்களை நீ கண்டுபிடித்துச் சொல்லாவிட்டால் உன் கண்களைக் குருடாக்கி, மூக்கை அறுத்து விடுவேன்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.


ஜோதிட வேடம் புனைந்து கொண்ட சிகாமணிக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது. வெளியே வந்தான். கால் போன வழி நடந்தான். கால் வலித்தது. ஓரிடத்தில் உட்கார்ந்தான். அவன் அமர்ந்த இடம் ஒரு கிணற்றங்கரை. நேரமோ உச்சிவேளை.

சிகாமணிக்கு இனிமேல் எதையும் பார்க்க முடியாது. 'மூக்கை இழந்த முகம் மொண்ணையாக இருக்கும்' என்று வருத்தமாக இருந்தது.

"கண்ணே! மூக்கே உங்களுக்கு ஆபத்து" என்று புலம்பிக் கொண்டே இருந்தான். காலையிலிருந்து எதுவும் சாப்பிடாததால் பசி மயக்கம், மனத்துன்பம் எல்லாமாகச் சேர்ந்து கிறக்கமாக இருந்தது. வாய் குளறி கண்ணே, 'கண்ணி'யாகவும், மூக்கே, 'மூக்கி'யாகவும் உருமாறியது.

அந்தச் சமயம் தண்ணீர் எடுக்க வந்த கண்ணம்மாவும், மூக்காயியும் திடுக்கிட்டனர்.

மாலதி



"கண்ணம்மா! இவர் பெரிய ஜோதிடர் என்று என் தோழி சொன்னாள். திருட்டைக் கண்டுபிடிக்க இவரை அரசர் நியமித்திருக்கிறார் என்றதுமே என் வயிற்றில் புளி கரைத்தது. எவ்வளவு தந்திரமாய் நாம் செய்ததைக் கண்டுபிடித்து விட்டார் பார்த்தியா? ஜாடையாய் நம் பெயரைச் சொல்கிறார். நாம் இங்கே வருவோம் என்பதையும் யூகித்திருக்கிறார். பேசாமல் சரணடைந்து விடுவோம். தலை தப்பும்" என்றாள் மூக்காயி.

கண்ணம்மாவும் ஒப்புக் கொண்டாள்.

மூக்காயியின் பேச்சைச் செவிமடுத்த சிகாமணிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. அதிர்ஷ்ட தேவதை தம்மைக் கைவிடவில்லை என்று மனம் பூரித்தார்.

கண்ணம்மாவும், மூக்காயியும் தங்கள் தவறை ஒப்புக் கொண்டு பொருள்களை ஒப்படைத்தனர்.

ஹோமம் செய்து யக்ஷிணி மூலம் காணாமல் போன பேலாவையும் வட்டிலையும் வரவழைப்பதாகச் சொன்ன சிகாமணி எவரும் அறியாமல் யாக குண்டத்துக்கடியில் பொருட்களை ஒளித்து வைத்து தங்கம் உருகாதிருக்க அதன் மேல் மணலைக் கொட்டி செங்கல்லை அடுக்கினார். அதிகம் நெய் ஊற்றாமல் யாகம் செய்தார். யாகத் தீ அவிந்ததும் பொருட்களை எடுத்து மன்னரிடம் கொடுத்தார். மன்னர் மகிழ்ந்து பல விலை உயர்ந்த பரிசுகளை அளித்து கௌரவித்தார்.

ஆனால் மந்திரி இதை நம்பவில்லை. யாக சாலை கட்டும் இடத்தில் சிகாமணி யாரையுமே அனுமதிக்காதது அவருக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது. வேந்தரிடம் இதுபற்றிச் சொன்ன போது, "அவர்தான் மந்திரம் சொல்லி கல் அடுக்கும் போது இரண்டாவது நபர் இருந்தால் பலிக்காது என்றாரே! சிகாமணியே திருடி விட்டு நாடகமாடுகிறார்

என்கிறீர்களா? அதை நம்ப முடியாது.. சிகாமணியை நாம்தான் வரவழைத்தோம். 'இன்னும் சொல்லப் போனால் இந்தக் குற்றத்தை ஆராயவே அவர் விரும்பவில்லை. எல்லோரையும் சந்தேகப்படுவது குற்றம்" என்று கோபமாகச் சொல்லி விட்டார் 'அரசர்.

"சரி... நான் ஒரு பொருளை கைக்குள் வைத்துக் கொள்வேன். அது என்ன என்று நிறைந்த சபையில் அவர் சொல்லி விட்டால் அவர் மெய்யான ஜோதிடர் என்பதை நான் ஒப்புக் கொள்வேன்" என்றார் அமைச்சர்.

மன்னர் சபையைக் கூட்டினார். ஜோதிடரை வரவழைத்தார். அமைச்சர் கையிலிருப்பது என்ன என்பது அரசருக்குக் கூடத் தெரியாது.

கடுகு, மிளகு, சீரகம், குந்துமணி, துவரை, உளுந்து, பயறு, கோதுமை, நெல், மஞ்சாடி, விதை என்று ஆளுக்காள் யூகம் செய்தனர்.

சிகாமணி, 'இதோடு அழிந்தோம்' என்று தீர்மானித்து உதறலோடு நின்றிருந்தார்.

"சிகாமணி, அமைச்சரின் மூடிய கைகளுக்குள் இருப்பதை ஜோதிடத்தால் அறிந்து சொல்ல வேண்டும்" என்றார் அரசர்.

எதிரே, 'மாட்டிக் கொண்டான் சிகாமணி' என்ற மமதையோடு நிற்கும் மந்திரி. அனைவர் முகங்களிலும் முடிவை அறியும் பரபரப்பு. காதைத் தீட்டிக் கொண்டிருந்தனர். சபையில் ஊசி விழுந்தால் கேட்கும் நிசப்தம்.

"அகப்பட்டுக் கொண்டாரையா தும்பட்டிக்காய் வீரர்" என்று அலுத்துக் கொண்டான் சிகாமணி.

தும்பட்டிக்காய் என்பது மிகச் சிறியது. வாய் வீரம் பேசுபவர்களை இப்படி நையாண்டி செய்வது உலக வழக்கு. தன்னையே இடித்துரைத்து சிகாமணி சொன்னதைக் கேட்டு மயக்கம் போட்டு விழுந்தார் மந்திரி! ஏனெனில் அவரது கையில் இருந்தது தும்பட்டிக்காய்! இதை எங்கே சொல்லப் போகிறார் என்று அவர் நினைத்தார்!

குறுக்கெழுத்துப் புதிர் விடை




1 பி	ள்	ளை	யா	ர்	■	2 ந	த்	3 தை
த்	■	ள்	■	த	■	4 தி	■	ரா
த	■	4 கொ	■	5 க	■	■	■	ய்
ளை	6 மூ	■	ரை	■	■	7 ப	ட்	டு
■	■	■	8 க	ட	ல்	■	■	■
தி	ந்	9 கு	■	■	10 வா	■	ளை	11 க
ந்	■	■	■	ம்	■	ல்	■	ரு
ல	■	டை	■	க	■	வ	■	ட
12 சி	ற	13 கு	■	14 மே	க	15 நா	த	ன்

வேகம்

ஆழி


பூமி சுழலும் வேகம் மணிக்குச் சுமார் 106,560 கி.மீ.






சந்திரன், பூமியைச் சுற்றி வரும் வேகம் மணிக்குச் சுமார் 3659 கி.மீ.

ஒரு ராக்கெட்டின் வேகம் மணிக்குச் சுமார் 40,000 கி.மீ.




ஒலியின் வேகம் மணிக்குச் சுமார் 1216 கி.மீ.






ஒளி, ஒரு விநாடிக்கு 2,97,600 கி.மீ. வேகத்தில் பாய்கிறது. சூரியனுடைய ஒளி பூமியை அடைய 8 நிமிடங்கள் ஆகின்றன.


உலகிலேயே மிகப் பெரிய பாலூட்டியான திமிங்கிலம் நீந்தும் வேகம் மணிக்குச் சுமார் 32 கி.மீ. தான்!




மீன்களில் வேகமாக நீந்துவது
அட்லாண்டிக் சமுத்திரத்தில் வாழும்
'செயில் ஃபிஷ்'. அது நீந்தும்
வேகம் மணிக்குச்
சுமார் 109 கி.மீ.



நிலத்தில் வாழும் மிகப்பெரிய
விலங்கான யானை நடக்கும்
வேகம் மணிக்குச் சுமார்
13 கி.மீ. அது ஓடும் வேகம்
மணிக்குச் சுமார் 40 கி.மீ.




விலங்குகளில் மிக
அதிகமான வேகத்தில்
ஓடுவது சிறுத்தைதான்.
அதன் வேகம் மணிக்குச்
சுமார் 120 கி.மீ!




சிறுத்தைக்கு அடுத்த
படியான வேகத்தில்
ஓடுவது 'கஸெல்' என்னும்
மான் தான். அது மணிக்கு
96 கி.மீ. வேகத்தில் ஓடும்!



பந்தயக் குதிரை
களின் வேகம்
மணிக்குச்
சுமார் 88 கி.மீ.



நத்தையின் வேகம் விநாடிக்கு
1.5 மி.மீ. அல்லது மணிக்கு
5.4 மீட்டர்!




தேனீக்களின்
பறக்கும் வேகம்
மணிக்கு 65 கி.மீ.
அவற்றால் தொடர்ந்
தாற் போல் 11 கி.மீ.
தூரம் பறக்க
முடியும்!



நெருப்புக்கோழியால்
பறக்க முடியாது. ஆனால்
அது ஓடும் வேகம்
மணிக்கு 88 கி.மீ!

மரங்கொத்திப்
பறவை, மரத்தைக்
கொத்தும் வேகம்
மணிக்கு
2,080 கி.மீ!






உலகில்
மிக வேகமாக
வளரும்
தாவரம்
மூங்கில்தான்
அது வளரும்
வேகம்
மணிக்கு
41 செ.மீ!



நமது தும்மலின் வேகம் என்ன தெரியுமா?
மணிக்கு 72 கி.மீ!

நம் உடலில்
இரத்தம்
மணிக்குச்
சுமார்
11 கி.மீ
வேகத்தில்
ஓடுகிறது!





மனிதன் நீந்தும் வேகம்
மணிக்குச்
சுமார் 8 கி.மீ!

ஒரு மனிதன்
அதிக வேகமாக
நடந்தால்
ஒரு மணி நேரத்தில்
சுமார் 13 கி.மீ.
தூரம் போகலாம்!





மனிதன் ஓடும் வேகம்
மணிக்குச் சுமார் 32 கி.மீ.
உலக மக்களில்
நீக்ரோக்களே அதிக வேகமாக
ஓடுகிறார்கள். அவர்களுடைய
குதிகால்கள் மிக நீளமாக
இருப்பதுதான் அதற்குக்
காரணம் என்று
சொல்லப்படுகிறது!

உலகம் போற்றும் உன்னதக் கலை!

நம் நாடு இசையிலும் நடனத்திலும் உலகப் புகழ் பெற்றது.

பழங்காலத்திலேயே மக்கள் இயற்கையில் எழும் ஒலிகளைக் கேட்டு மகிழ்ந்தனர். குயில் கூவுவதும் அருவி நீர் சலசலப்பதும் காதுக்கு மிகவும் இனிமையாக இருந்திருக்கிறது. பின்னர் மக்கள் தாங்களே குரல் எழுப்பி இசையை தோற்றுவித்தனர். நாளடைவில் இசைக் கருவிகளையும் உருவாக்கினர்.

அதே போல் பரதக் கலையும் மிகவும் தொன்மையானது. இதற்குப் பல சிறப்புகள் உண்டு. இசையின் தாளத்திற்கேற்ப அழகான அசைவுகள், கால் மிதியில் லயம் தோன்ற அடியெடுத்து வைத்து ஆடுதல், பக்தி பாவம், நாடகம் முதலியவற்றை இதில் காணலாம்.

இந்நாட்டியத்தில் அபிநயம் மிக முக்கியமானது. பாடலில் வரும் உணர்ச்சிகளை முகத்திலும், அங்க அசைவுகளிலும் உணர்த்துவது அபிநயமே. மேலும் சொற்களாலும் நடை, உடை, பாவனைகளாலும் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதும் உண்டு.

நமது பாரம்பரிய இசையும் நடனமும் எப்போது தோன்றியது என்பதை இன்னும் கூட சரியாகக் கண்டறிய முடியவில்லை. அவ்வளவு பழமையானது. நமது இசையைப் போல் மேற்கத்திய இசைகளில் ராகம், இலக்கணம், என்பது இல்லை. ஆனால் மேற்கத்திய இசையின் வளர்ச்சிக்கு நம் இசை மிகவும் உதவியிருக்கிறது. பல்வேறு வடிவங்களில் உணர்ச்சிகளைக் காட்டி ஆடுவது பரதம் தவிர வேறு எந்த நடனத்திலும் கிடையாது. எனவேதான் இக்கலை உலகம் போற்றும் விதத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. நமது இசை, நடனத்தின் மீது ஆர்வம் கொண்டு பல வெளிநாட்டவர்கள் இங்கு வந்து ஆர்வத்துடன் கற்றுக் கொள்கின்றனர்.

நம் நாட்டில் இன்றைய நிலை என்ன? ஏகப்பட்ட தொலைத் தொடர்பு சாதனங்கள் வந்து விட்டன. டீவி. சேனல்களில் மேற்கத்திய கலாச்சாரத்தின் தாக்கம் அதிக மாகிக் கொண்டு வருகிறது. நீங்கள் அத்தகைய நிகழ்ச்சிகளைப் பார்த்தால் தான் நமது இசை, நடனத்தின் மேன்மையைப் புரிந்து கொள்ள முடியும்!

இன்று பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் கலை நிகழ்ச்சிகள் என்ற பெயரில் சினிமா பாடல்களுக்கு ஆடுவது என்பதைப் பரவலாகக் காண முடிகிறது.

மேற்கத்திய இசையின் தாக்கம்தான் சினிமா பாடல்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

எல்லோருக்கும் இசையைக் கற்கவும் நடனத்தைப் பயிலவும் இயலாதுதான்! ஆனால் நல்ல இசையை, நடனத்தை ரசிப்பது என்பது எல்லோராலுமே செய்ய இயலும் காரியம்தானே! டிசம்பர் மாதம் - இசை மாதம். நல்ல முறையில் பயன் படுத்தலாமே!

அட்டையில் இருக்கும் சஹானா பன்னிரெண்டு வயதானவர். சென்ற மாதம் தனது அரங்கேற்றத்தை நிகழ்த்தி இருக்கிறார். எட்டு வயதிலிருந்து நடனம் கற்க ஆரம்பித்த சஹானாவுக்கு நாட்டியம் என்றால் உயிர்!

வண்ணப்படம் : ஸ்ரீஹரி



தென் ஆப்பிரிக்காவா



• ஜாண்டி ரோட்ஸ்



• சிம்காக்ஸ்

கண்ணன் வந்தபோது நான் மினி உலகக் கோப்பையின் இறுதிப் போட்டியில் மூழ்கியிருந்தேன். நான் எழுதி வைத்திருந்த குறிப்புகளை எடுத்து 'கடகட'வென படிக்கத் தொடங்கினான் அவன். "ஜிம்பாப்வேயை நியூசிலாந்து வென்றது; இங்கிலாந்தை தென் ஆப்பிரிக்கா வென்றது; நியூசிலாந்தை இலங்கை வென்றது; ஆஸ்திரேலியாவை இந்தியா வென்றது; பாகிஸ்தானை மேற்கிந்தியத்தீவுகள் வென்றது. அரை இறுதியில் இலங்கையை தென்ஆப்பிரிக்கா வென்றது. இந்தியாவை மேற்கிந்தியத் தீவுகள் வென்றது'' என்று படித்துவிட்டு "இறுதிப் போட்டியில். யாரை யார் வெல்லப் போகிறார்கள்?" என்று கேள்வியோடு முடித்தான் அவன்.

''அதைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்றேன் நான்.

"தென் ஆப்பிரிக்காதான் கோப்பையை கைப்பற்றும்" என்றான் அவன்.

"ஆட்டத்தின் போக்கைப் பார்க்கும்போது எனக்கும் அப்படியே தோன்றுகிறது'' என்று கூறிவிட்டு குரோனியே பந்தை எல்லைக் கோடிற்கு அனுப்புவதை ரசிக்க லானேன்.


கொஞ்ச நேரத்திலேயே ஆட்டம் முடிந்தது. எல்லோரும் எதிர்பார்த்தபடியே தென் ஆப்பிரிக்கா மினி உலகக் கோப்பையையும் 43 லட்ச ரூபாய் பரிசுப் பணத்தையும் வெகு மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டது.



அம்மா எங்களை உண வருந்த அழைத்தார். சுடச்சுட அடை. வெளியே மழை. அடாது பெய்து கொண்டிருந்த மழையை விடாது பார்த்துக் கொண்டிருந்த கண்ணன் பேசத் தொடங்கினான்.

''இதுவரை பல முறை இறுதி ஆட்டம் வரை வெற்றிகரமாக வந்து அதில் தோல்வி அடைவார்கள் – இந்த தென் ஆப்பிரிக்காகாரர்கள். இந்த முறை அவர்கள் ஏமாற்றம் அடையவில்லை.''

"ஆமாம். கேப்டன் குரோனியே கூட இப்போது சொன்னார். 'தன் வாழ்க்கையில் மறக்க முடியாத மகிழ்ச்சியான நாள் இது' என்று. பொதுவாகவே தென் ஆப்பிரிக்கா அணி கட்டுக்கோப்போடு விளையாடி வருகிறது. ஆல்ரவுண்டர்கள் நிறைந்த அணி. 38 வயது சிம்காக்ஸ் கூட இன்றும் துடிப்போடு ஆடி



அணிக்கு வலு சேர்க்கிறார். டோனால்ட், குளுஸ்னர், ஷான் பொல்லாக் போன்ற வேகப்பந்து வீச்சாளர்கள் இந்தப் போட்டியில் இடம் பெறவில்லை. இருந்தாலும் காலிஸ், எல்வொர்தி போன்றவர்கள் தூள் கிளப்பினார்கள்.



காலிஸிற்கு இறுதிப் போட்டியில் 5 விக்கெட்டுகள்; ஆட்ட நாயகன் விருது. அதற்கு முந்தைய போட்டியில் காலிஸ் செஞ்சுரி அடித்து ஆட்டநாயகன் ஆனார். கேப்டன் குரோனியே எல்லாப் போட்டிகளிலுமே ரன் சேர்ப்பதிலும், விக்கெட்டுகள் வீழ்த்துவதிலும் திறமை காட்டுகிறார்."

கண்ணன் குறுக்கிட்டான். "ஜான்டி ரோட்ஸ் எப்படி?"

"அவரைப் பற்றி சொல்ல வேண்டுமா, என்ன? அடித்து ரன் சேர்ப்பது தவிர, தடுத்து ரன் குறைப்பதே அவருடைய தலையாய பணி. இந்தத் தொடரில் அவர் பிடித்த ஒரு கேட்ச் 'யப்பா' – நம்பவே முடியவில்லை. 'பாய்ந்து பாய்ந்து பிடித்தார்' என்றெல்லாம் வர்ணனை செய்வார்களே. அது ஜான்டியைப் பொருத்தவரையிலும் உண்மையோ உண்மை. பாய்ந்து மட்டுமா? பறந்து பறந்து கூட இவர் கேட்ச் பிடிக்க முயற்சிப்பார்" என்று நான் ஜான்டி புகழ் பாடி முடித்தேன்.

"ரிச்சர்ட்சன் ஓய்வுக்குப் பின் புதிய விக்கெட்கீப்பர் மார்க் பவுச்சர் வந்திருக்கிறாரே?"

"இந்த இளைஞர் என் மனதில் இடம் பிடித்து விட்டார். குறுகிய காலத்திலேயே 50க்கும் மேற்பட்ட கேட்ச்களைப் பிடித்து விட்டார். நல்ல முறையில் ஸ்டம்பிங்குகளும் செய்கிறார். தேவையேற்படும் ரன்களும் சேர்க்கிறார். அணிக்கு இவர் பக்க பலம்."

ஜொக்கா?



• தென் ஆப்பிரிக்க அணி

• கேப்டன் குரோனியே



"தென் ஆப்பிரிக்கா, ஒரு நாள் ஆட்டத்திற்குத்தான் லாயக்கான அணி என்கிறாரே ஸ்ரீகாந்த்?" என்று தன் ஐயத்தை எழுப்பினான் கண்ணன்.

"அது ஸ்ரீகாந்தின் கருத்து. நான் அப்படி நினைக்கவில்லை. கிரிக்கெட்டில் எதுவும் நடக்கலாம். ஜிம்பாப்வே அணி கூட அண்மையில் இந்தியாவை டெஸ்டில் வென்றது. பிரதான வீரர்கள் யாரும் அற்ற நிலையில் கூட, ஷான் பொல்லாக்

டெஸ்ட் இன்னிங்ஸில் அதிக ரன் சேர்த்தோர்				
யார்?	எவ்வளவு?	யாருக்கு எதிராக?	எந்த இன்னிங்ஸ்?	எப்போது?
1. பிரையன் லாரா (மேற்கிந்தியத் தீவுகள்	375	இங்கிலாந்து	முதல்	1993-94
2. சோபர்ஸ் (மேற்கிந்தியத் தீவுகள்)	365*	பாகிஸ்தான்	முதல்	1957-58
3. எல். ஹட்டன் (இங்கிலாந்து)	364	ஆஸ்திரேலியா	முதல்	1938
4. சனத் ஜெய சூர்யா (இலங்கை)	340	இந்தியா	முதல்	1997-98
5. ஹனீப் மொஹமத் (பாகிஸ்தான்)	337	மேற்கிந்தியத் தீவுகள்	இரண்டாம்	1957-58
6. ஹாம்மாண்ட் (இங்கிலாந்து)	336*	நியூசிலாந்து	முதல்	1932-33
7. மார்க் டெய்லர் (ஆஸ்திரேலியா)	334*	பாகிஸ்தான்	முதல்	1998-99
8. டோனால்ட் பிராட்மேன் (ஆஸ்திரேலியா)	334	இங்கிலாந்து	முதல்	1930
9. கிரஹாம் கூச் (இங்கிலாந்து)	333	இந்தியா	முதல்	1990

* ஆட்டமிழக்கவில்லை

தலைமையில் மலேசியா சென்ற தென் ஆப்பிரிக்கா அணி காமன் வெல்த் போட்டியில் கிரிக்கெட் தங்கப் பதக்கத்தை வென்றது. இப்போது மீண்டும் தென் ஆப் பிரிக்காவுக்கே வெற்றி.

தென் ஆப்பிரிக்க அணியில் தனிப் பட்ட ஹீரோக்கள் யாரும் இல்லாததால் ஸ்ரீகாந்த் அப்படி கூறியிருக்கலாம். அணிக்கு இவர்தான் வெற்றி தேடித் தருவார் என்ற நிலையில் நம் சச்சின் டெண்டுல்கர் போல ஒருவர் அந்த அணி யில் இல்லை. இது உண்மைதான். ஆனால் அணியில் உள்ள யாரேனும் ஒருவர் அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்வார் என்பதில் சந்தேகமில்லை. டெஸ்ட் தொடர்களிலும் தென் ஆப்பிரிக் காவின் முத்திரை விழும் காலம் விரைவி லேயே வரும்'' என்று கூறிவிட்டு நான் தூங்கச் சென்றேன். கண்ணனும்தான்.

தன்னலமற்ற மார்க் டெய்லரின் மகத்தான இன்னிங்ஸ்!

நானோ நீங்களோ இப்படி செய் வோமா என்றால் நிச்சயமாக இல்லை. இப்படி ஒரு வாய்ப்பு இனி எப்போது வரும்? எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டுமோ? யாருக்கும் தெரியாது. ஆம். அப்படி ஒரு வராது வந்த நல்வாய்ப்பு '334' என்ற எண்ணைத் தொடர்ந்து வந்தது மார்க் டெய்லருக்கு. ஆஸ்திரேலிய கிரிக் கெட் அணியின் டெஸ்ட் கேப்டன் மார்க் டெய்லர். அக்டோபர் மாதம் மூன்று டெஸ்ட்களில் ஆஸ்திரேலியா பாக்கிஸ் தானில் ஆடியது. முதலாவது டெஸ்ட்டில் ஆஸ்திரேலியாவுக்கு வெற்றி. இரண்டா வது டெஸ்ட் - முதல் இன்னிங்ஸ் மார்க் டெய்லர் தொடக்க ஆட்டக்காரராகக் கள மிறங்கி ஆடிக் கொண்டிருக்கிறார்.

துணை ஆட்டக்காரர் ஸ்லேட்டர் 2 ரன்களிலேயே அவுட் ஆனாலும், அடுத்து வந்த லாங்கர் டெய்லருக்குத் தோள் கொடுக்கிறார். டெய்லர் சதம் அடிக்கிறார்; இருநூறு ரன்கள் அடிக்கிறார்; ஓ! முன் னூறு ரன்களும் சேர்த்தாயிற்று. இப்போது கிரிக்கெட் உலகின் கவனம் டெய்லரின் பக்கம் திரும்புகிறது. இன்னும் 75 ரன்கள் குவித்து பிரையன் லாராவின் உலக சாத னையை டெய்லர் எட்டுவாரா? அதையும் முறியடிப்பாரா? இதுவரை கிரிக்கெட் தாத்தா டான் பிராட்மென் மட்டுமே வைத்திருந்த ஆஸ்திரேலிய சாதனையான

334 ரன்களையும் டெய்லர் எட்டி விட்டார். ஆட்டமிழக்கவில்லை. ஆனால் எல்லோருக்கும் 'டாட்டா' காட்டிவிட்டு பாக்கிஸ்தான் அணியை களமிறங்கும்படி கூறிவிட்டு, முதலாவது இன்னிங்ஸை டிக்ளேர் செய்து விட்டார்.

334 ரன்களை டெய்லர் அடைந்ததன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு இன்னிங்ஸில் அதிக ரன்கள் சேர்த்த ஆஸ்திரேலியர் என்ற பெருமையை டெய்லர் பெற்று விட்டார். முறையே இன்னும் 2, 3, 6 ரன்கள் சேர்த்திருந்தால் ஹாம்மண்ட் (இங்கிலாந்து), ஹனீப் மொஹமத் (பாக்கிஸ்தான்), ஜெயசூர்யா (இலங்கை) ஆகிய வீரர்களின் சாதனை ரன்களை முறியடித்திருக்கலாம். 41 ரன்கள் சேர்த்திருந்தால் பிரையன் லாராவின் உலக சாதனையும் அம்பேல். அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்வதற்காக டெய்லர் தன் இன்னிங்ஸை முடித்து விட்டார்.

சர் டோனால்ட் பிராட்மேனின் 334 ரன்கள் ஆஸ்திரேலிய சாதனையை 68 ஆண்டுகளாக எந்த ஆஸ்திரேலியரும் எட்டவில்லை. மார்க் டெய்லருக்கே அந்தப் பாக்கியம் கிட்டியிருக்கிறது. ''டெய்லரின் இந்த வெற்றி ரன்களுக்காக நான் அவரைப் பாராட்ட வேண்டும்'' என்று பிராட்மேன் கூறியிருக்கிறார். ''நான் சர் டோனால்ட் பிராட்மேனின் சாதனையை சமன் செய்ததாலேயே பெரிதும் திருப்தி அடைந்திருக்கிறேன்'' என்கிறார் மார்க் டெய்லர்.

"தங்கள் சொந்த சாதனைகளுக்காகவே பல ஆட்டக்காரர்கள் ஆடுவார்கள். ஆனால் மார்க் டெய்லர், அணியின் வெற்றிக்காக தியாகம் செய்து விட்டார்'' என்று கூறியிருக்கிறார் அணியின் கோச் ஜியோஃப் மார்ஷ்.

''டெய்லரின் இந்த 'டிக்ளேர்' முடிவு உலக விளையாட்டுச் சரித்திரத்தில் என்றும் நினைவு கூரத்தக்க தன்னலமற்ற முடிவு'' என்கிறார் வர்ணனையாளர் டேவிட் ஹூக்ஸ்.

ஒரே டெஸ்டில் அதிக ரன்கள் சேர்த்தவர் பட்டியலில் கிரஹாம் கூச் 456 ரன்கள் சேர்த்து முதலிடத்தில் இருக்கிறார். இந்த டெஸ்ட்டில் 426 ரன்கள் சேர்த்த டெய்லர் உலகில் இரண்டாவது இடம் பிடிக்கிறார்.

இன்னொரு முறை டெய்லருக்கு இது போன்ற வாய்ப்புக் கிட்டட்டும். அதில் அவர் உலக சாதனை புரியட்டும்!


— விளையாட்டுப் பையன்.



• மார்க் டெய்லர்



நகைச்சுவைப் போட்டி முடிவு



"என்னப்பா இட்லி சாஃப்டா இருக்குமா?"


"சாப்பிட்ட அப்புறம் எப்படி சார் இருக்கும்?"


- எஸ்.டி. செந்தில்குமார், திட்டக்குடி, கடலூர் மாவட்டம்.

"நீ பெரியவன் ஆனதும் என்ன செய்வே?"

"இப்போ ஒ[illegible] வேளைக்கு இரண்டு இட்லி சாப்பிட[illegible]ன். பெரியவனானதும் பத்து இட்லி சாபபடுவேன்."

- குமார் ஆட்டையாம்பாளையம், அவிநாசி.





"நம்ம காலனியில் 'மாஸ்டர் முட்டாள்' பரிசுப் போட்டி வைக்கிறாங்க, நீ போகாதே!"

"ஏண்டா, நான் புத்திசாலி என்பதாலே சொல்றியா?"

"இல்லைடா. மற்றவர்களுக்குப் பரிசு கிடைக்காதே!"

- கி. ஞானப்பிரகாஷ், எட்டாம் வகுப்பு, மடிப்பாக்கம்.



"ஒரு காட்டில் யானை தலை தெறிக்க ஓடிச்சாம்..."

"தலைதெறிச்சுப் போச்சுனா எப்படிடா ஓடும்?"

- ப. காளிதாசன், நீர்விளங்குளம், புதுக்கோட்டை.

"என்ன? கடையில் ஒரே கூட்டமா இருக்கு?"

"இலவம் பஞ்சு கிடைக்கும் என்று எழுதுவதற்குப் பதில் 'இலவசம் பஞ்சு'ன்னு எழுதி வச்சிட்டாங்க. அதான்!"

- எஸ். சேதுராமன், நீடாமங்கலம்.



"நீ என்ன படிக்கிறே?"

"பி.காம்."

"இது எத்தனையாவது வருஷம்?"

"1998-வது வருஷம்!"

- கே.ஆர். உதயகுமார், சென்னை.




"இந்த பஸ் ஓடுமா?"

"ஓடுமே! ஏன் கேட்கறீங்க?"

"ஓடும் பஸ்ஸில் ஏறாதேன்னு போட்டிருக்கே அதான்!"

- எம். ராமசாமி, திருச்சி.



"அமாவாசை வந்தாலே பையனை சாப்பிட வைக்க பெரும்பாடுதான்."

"ஏன்?"

"நிலாவைக் காட்டினால்தானே சாப்பிடுவான்!"

- ஆ. அருண்ராஜ், தாரமங்கலம்.



"நான் இனிமையா பாடுவேன்."

"அதான் உன் வாயில் ஈ மொய்க்குதா?"

- க. குழந்தைவேல், மேட்டுத்திருக்காம்புலியூர்.



ஒவ்வொரு நகைச்சுவையும் ரூபாய் பத்து பரிசு பெறுகிறது.



"சமாதானத்துக்கு வெண் புறா கிடைக்காததால், பச்சைக் கிளியை தூதா அனுப்பினது தப்பாப் போயிருச்சு!"

"ஏன் அரசே?"

"நாம, போருக்கு பச்சைக் கொடி காட்டினதா நினைச்சுட்டாங்க!"

- தி. கருப்பையா,
பட்டுக்கோட்டை.



"டாக்டரைப் பார்த்தியா? என்ன சொன்னார்?"

"ஒண்ணும் சொல்லலை. நீங்க பார்த்துட்டு மட்டும்தானே வரச் சொன்னீங்க!"


- கே. மணிகண்டன்,
ஆர்.எஸ்.புரம், கோவை.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்! கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

"ஏண்டா, நீ மட்டும் 'வீட்டுப் பாடம்' செய்யலை?"

"நான் விடுதியில் தங்கியிருக்கேன் சார்!"


- அக்ஷையா, எட்டாம் வகுப்பு,
சென்னை.




"உங்க பையனுக்கு நகைச்சுவை உணர்வு இருப்பதாகச் சொன்னீங்க! நகத்தைக் கடிச்சிட்டு இருக்கானே!"

"நகைச்சுவை உணர்வு இல்லீங்க. நகச்சுவை உணர்வுங்க!"

- கே. சாந்தி,
மன்னார்குடி.



Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623 ;
Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Subscription : (Inland) Annual Rs. 72/-; Half Yearly Rs. 36/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-



சமையலறையில் இந்தப் பொருள் தேவையில்லை... எங்கே கண்டுபிடி யுங்கள்!

விடை : கிரிக்கெட் மட்டை

அணில் பழத்தை எடுக்க உதவுங்கள்!



காய்களைக் கண்டு பிடியுங்கள்?


1. மழைக்கும், வெயிலுக்கும் உதவும் காய்?
2. அடிபட்ட காய்?
3. பூ உள்ள காய்?
4. அணிய முடியாத ஆடை உள்ள காய்?
5. வெள்ளைச் சாயம் பூசிய காய்?
6. பயமூட்டும் காய்?
7. கை உள்ள காய்?

— டெ. ஆல்வின், ஐரேனிபுரம்

விடை : 1. குடை மிளகாய், 2. வெங்காயம், 3. பூசணி, 4. முள்ளங்கி, 5. வெண்டைக் காய், 6. தக்காளி, 7. முருங்கைக் காய்.

வண்ணம் தீட்டுங்கள்!






சம அளவுள்ள 12 குச்சிகள் படத்தில் உள்ளது போல் 3 சதுரங்களாக வைக்கப்பட்டுள்ளன. ஏதேனும் 3 குச்சிகளை இடம் மாற்றி 5 சதுரங்களை உருவாக்குங்கள்.

— எம். வினோத், ஐந்தாம் வகுப்பு, விருத்தாச்சலம்.

விடை :



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka



Mudra RASNA:1Ua